விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (12.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114


SATS-TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

## வன்னி உறவுகளைக் காப்பாற்றக் கோரி

# உலகெங்குமுள்ள தமிழர்கள் அலையெனத் திரண்டு பேரணி



## பிரித்தானியாவில் ஒன்றரை இலட்சம் பேர் திரண்டனர்

(லண்டன்)

இலங்கையின் வடபகுதியில் நடைபெறும் போரினை உடனடியாக நிறுத்தக் கோரியும் அங்கு மோதல் பகுதியில் அகப்பட்டிருக்கின்ற மக்களுக்கு அவசர உதவிகள் உடனடியாக அனுப்பப்பட வேண்டுமெனக் கோரியும் உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம், உண்ணா விரதம் என பல்வேறு எழுச்சிப்போராட்டங்கள் பிரித்தானியா, சுவிஸ், ஜேர்மனி, கனடா, தென்ஆபிரிக்கா உள்ளிட்ட பலநாடுகளில் நேற்று நடைபெற்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)



## எறிகணை, துப்பாக்கிச் சூடு 32 பேர் பலி; 75பேர் படுகாயம்

(வவுனியா)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற எறிகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் 32 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 75 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக கொல்லப்பட்டவர்களை புதைக்க முடியாமலும் படுகாயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாமலும் உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் பெயர், விபரம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. (ந-5)

### சிவ்சங்கர் மேனனை சந்திப்பதா? இல்லையா?

## சம்பந்தனுடன் முடிபெடுக்க மாவை சென்னை விரைவு

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனுடனான சந்திப்புக்காக விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் கருத்து முரண்பாடுகள் உருவாகியிருப்பதாக தெரிகிறது.

இதனால் கூட்டமைப்பு தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளலாம் எனத் தெரிகிறது.

மேனனைச் (14 ஆம் பக்கம் பார்க்க)



## 'விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலம்' என் ஒன்று ஒருபோதும் வரப்போவதேயில்லை

### இந்திய இதழான தெஹெல்காவிற்கு நடேசன் தெரிவிப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலகட்டம் (Post-LTTE Scenario) என ஒன்று ஒரு போதுமே வரப்போவதில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், இவ்வாறான காலம் ஒன்று வரும் எனக் காத்திருந்து-காலத்தை வீணடித்து, மனித உயிர்களை அழிக்காமல், தமிழ் மக்களுடைய சுயநிர்ணய (02ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கடந்த சில வாரங்களாக வவுனியா மாவட்டத்திற்கு விஜயம் செய்து பல்வேறு மக்கள் நலப் பணிகளை (14 ஆம் பக்கம் பார்க்க)

புதுவருடத்தை முன்னிட்டு...

பால்மா வகைகள், கேக் தயாரிக்கும் பொருட்கள், சொக்லேட் வகைகள், பழ வகைகள், வாசனைப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள்

ரூபா 300/= க்கு பொருட்களைகொள்வனவு செய்து நீங்களும் அதிர்ஷ்டமுள்ள எமது வாடிக்கையாளர்களாக இணையுங்கள்

நிமிலி சுப்பர் ஸ்பொட்
சந்தை அருகாமை, மானிப்பாய்.

(C-2272)

## புலிகளின் ஒட்டுமொத்தப் பொறுப்பும் பொட்டு அம்மானிடம் ஒப்படைப்பு

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகள் பலர் கொல்லப்பட்டுள்ள நிலையில், அந்த அமைப்பின் ஒட்டுமொத்த தளபதியாக புலனாய்வுத் துறைப் பொறுப்பாளரும் மூத்த தளபதிகளில் ஒருவருமான பொட்டுஅம்மான் இப்போது செயற்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டி டெய்லி மிரர் பத்திரிகை (2ஆம் பக்கம் பார்க்க)



மிதிவெடி அபாயம் என குறியிடப்பட்ட பிரதேசங்களை

அவதானித்து விலகி நடப்போம்

சர்வோதயம்

யுனிசெப்

(C-2271)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வசந்த விழா விளையாட்டுப் போட்டிகள் மழைகாரணமாகப் பிற்போடப்பட்டது

இவ்வருடம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யாழ். மாவட்ட வசந்த எழுச்சிவிழா விளையாட்டுப் போட்டிகளின் இறுதிக்கட்ட போட்டிகள் மழை காரணமாக எதிர்வரும் மே மாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விஷேட செயலணித் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வசந்த எழுச்சி விழா அமைப்புக்குழுவின் பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர், யாழ். மாநகர சபை ஆணையாளர் உட்பட்ட பலருடன் நடத்திய விஷேட கலந்துரையாடலின் பின்னர் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் மே மாதம் 15,16,17ஆம் திகதிகளில் இறுதிக்கட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படும் பிரித்தானியப் பிரதிநிதி கருத்து

## இலங்கை அரசு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

விரைவில் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படும் என பிரித்தானிய பிரதமரின் விசேட பிரதிநிதி டெஸ் பிறவுண் வெளியிட்ட கருத்து குறித்து அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான உறுதி மொழிகள் மூலம் இலங்கையின் உள் விவகாரங்களில் பிரித்தானியா தேவையில்லாமல் தலையீடு செய்வதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் ஊடாக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலி ஆதரவாளர்கள் பிரித்தானியாவிடம் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது டெஸ் பிறவுண் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை இலங்கையில் போர் நிறுத்தமொன்றை அமுல்படுத்துமாறு கனேடிய அரசாங்கம் விடுத்த கோரிக்கையையும் இலங்கை அரசு நிராகரித்துள்ளது. (ந-5)

# அடகு நகை ஏலவிற்பனை இன்று நடைபெறும்

இலங்கை வங்கியில் மீட்கப்படாதிருந்த அடகு நகைகளின் ஏலவிற்பனை மழை காரணமாக, ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டபடி நேற்று பூர்த்தி செய்யப்படாமையால்,

இப்பகிரங்க ஏல விற்பனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து நடைபெறும் என இலங்கைவங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந. சிவரட்ணம் அறிவித்துள்ளார். (ந-14)

# பாதுகாப்பு வலயத்துள் தாக்குதல் நடத்தவில்லை

## அமைச்சர் நிமால் சிறிபால

(கொழும்பு)

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை நடத்தவில்லை என சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

கடந்த புதன்கிழமை பாதுகாப்பு வலயமான புதுமாத்தளன் பகுதியிலுள்ள வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தொடர்ச்சியான ஷெல் தாக்குதலில் வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டதுடன் 300 பேர் காயமடைந்திருப்பதாக அங்கிருக்கும் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி. வரதராஜா கூறியிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் சுகாதார சேவைகள் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா, பாதுகாப்பு வலயத்தை நோக்கி இராணுவத்தினர் தாக்குதல்களை நடத்த வில் லை என்றார்.

மோதல்கள் நடைபெறும் பகுதியில் இவ்வாறானதொரு சம்பவம் நடந்தால் சுகாதார அமைச்சு அதிகாரிகள் விடுதலைப்புலிகளுக்குச் சாதகமாகவே அறிக்கை விடுவார்கள். ஏனெனில் அவர்கள் தொடர்ந்தும் அங்கு உயிர் வாழ வேண்டும்.

அத்துடன் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளால் பிழையாக வழி நடத்தப்பட்டாலும் அரசாங்கம் சொல்வதையே ஐக்கிய நாடுகள் சபை கேட்கும்.

இலங்கைப் படைகள் பாதுகாப்பு வலயத்திற்குள் தாக்குதல் நடத்தியதாக ஐக்கிய நாடுகள் சபையோ ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது சர்வதேச சமூகமோ கூறியமைக்கான சுதந்திரமான ஆதாரங்கள் ஏதாவது உண்டா என அமைச்சர் கேள்வியெழுப்பினார். (ந-5)

# புலிகளின் ஒட்டுமொத்தப் பொறுப்பும்...

தகவல் வெளியிட்டுள்ளது.

எஞ்சியிருக்கும் முக்கிய தளபதிகளில் ஒருவரான வேலவன் அந்த அமைப்பின் இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு பச்சைபுல்லுமலைப் பிரதேசத்தை எதிர்பாராத விதமாக சுற்றிவளைத்து இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் விடுதலைப் புலிகளின்முக்கிய தளபதிகளான தீபன், கடாபி, விதுஷா, துர்க்கா, நாகேஸ், அமிதாப் உட்பட சுமார் 500 பேர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் பிரகடனப்படுத்தப்படாத நான்காம் ஈழப்போரின் மிகப்பெரிய சண்டை என்று ஊடகங்கள் இந்தத்தாக்குதலை வர்ணித்துள்ளன.

எனினும் இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரையில் எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

இராணுவத்தின் மீது பாரிய தாக்குதலொன்றை தொடுக்கும் நோக்கில் பச்சைப் புல்லுமலைப் பகுதியில் புலிகளின் முக்கிய தளபதிகள் தலைமையில் சுமார் 700 பேர் கூடியிருந்தபோது எதிர்பாராத விதமாக இந்தப் பகுதியை இராணுவத்தின் 53, 58ஆம் படைப் பிரிவின் குழுவினர் சுற்றிவளைத்ததாக பாதுகாப்புத் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 58-வது படைப்பிரிவின் முன்னரங்க நிலைகளை ஊடறுத்து இழந்த பல பிரதேசங்களை கைப்பற்றும் நோக்கில் விடுதலைப்புலிகள் இந்தப் பகுதியில் தாக்குதல் திட்டமொன்றை வகுத்திருந்ததாகவும் இதற்காக 130 மி.மீற்றர் ஆட்லறி பீரங்கிகள் உட்பட கனரக ஆயுதங்கள் பலவும் இந்தப் பகுதிக்கு நகர்த்தப்பட்டிருந்ததாகவும் படைத்தரப்பு கூறுகிறது.

நீண்ட தூர இலக்குகளை தாக்கப் பயன்படும் 130 மி.மீற்றர் ஆட்லறிகள் பொதுவாக முன்னரங்க காவல் நிலைகளுக்கு கொண்டு வருவது வழக்கம் இல்லை என்றாலும் இவற்றை படை நிலைகளுக்கு மிக நெருக்கமாக நிலத்துக்கு சமாந்தரமாக வைத்து தாக்குவதன் மூலம் படையினருக்கு பலத்த இழப்புகளை ஏற்படுத்து வது புலிகளின் நோக்கமாக இருந்தது என்று படைத்தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதியான தீபன், மட்டக்களப்பு புலனாய்வுத்துறைப்பொறுப்பாளர் கீர்த்தி, புலிகள் இயக்கத் தலைவரின் முன்னாள் மெய்ப்பாதுகாவலர் கடாபி, விசேட தளபதி லோரன்ஸ், ராதா படையணித் தளபதி சீலம்பு, குட்டிசிறி மோட்டார் படையணி தளபதி அமிதாப், மாலதி படையணி தளபதி விதுஷா, சோதியா படையணி தளபதி துர்க்கா, சாள்ஸ் அன்ரனி படையணி தளபதி அனுதாப், வெடிகுண்டு நிபுணர் நேரு, ராதா படையணி மூத்த தளபதி இனியவன், புளியங்குள பிரதேச புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக போர் நிறுத்த உடன்படிக்கை காலப்பகுதியில் செயற்பட்டுவந்த மாங்குயில், திருகோணமலை புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் அன்ரன் ஆகியோர் உட்பட 500க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக படைத்தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதன்போது 130 மி.மீற்றர் ஆட்லறி பீரங்கிகள் 3, 30 மி.மீற்றர் கனன் துப்பாக்கிகள் நான்கைக் கொண்ட, கால்களால் இயக்கக்கூடிய, நிமிடத்திற்கு 600 தோட்டாக்களை ஒரே தடவையில் சுடக் கூடிய விசேட விமான எதிர்ப்பு தாக்குதல் பீரங்கி உட்பட ஏராளமான கனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் படைத்தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இச்சுற்றிவளைப்புத் தாக்குதலின் போது அதற்குள் சிக்கியிருந்த விடுதலைப் புலிகளை சரணடையுமாறு தொலைத் தொடர்புகளை இடைமறித்து இராணுவத்தரப்பில் கோரப் பட்டபோதும், இறுதிவரை சண்டையிடப் போவதாக புலிகள் தரப்பில் கூறப்பட்டதாகவும் படைத்தரப்பை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ந-5)

# 'விடுதலைப் புலிகளுக்கு பின்னான...

உரிமையையும் தமிழர் தாயகத்தை யும் அங்கீகரித்து அவர்களுடைய அரசியல் விருப்புக்களை நிறைவேற்றுவதில் கவனத்தைச் செலுத்துங்கள் என உலக சமூகத்தையும் இந்தியாவையும் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தியாவில் இருந்து வெளிவரும் தெஹெல்கா இதழின் ஊடகவியலாளர் பி.சி. வினோஜ்குமாருக்கு பா. நடேசன் அளித்த சிறப்பு நேர் காணலின் முக்கிய பகுதிகள் வருமாறு,

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலம் என பலநோக்கர்கள் ஏற்கனவே கூறத் தொடங்கியிருப்பது பற்றி...?**

இங்கு நான் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலம் என்று ஒன்று இருக்கப் போவதேயில்லை. தமிழர்கள் அனைவருடைய அறிவிலும் உணர்விலும் சுதந்திரத்திற்கும் சுய மரியாதைக்குமானதாகம் தான் குடி கொண்டுள்ளது என்பதை உலகம் முழுவதிலும் உங்களால் பார்க்க முடியும்.

தமது அரசியல் விருப்புக்களை அடைவதற்கான ஒரு வழிமுறையாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தமிழர்கள் கருதுகின்றனர். அவர்களுடைய விடுதலைப்போராளிகள் என்ற முறையில், அவர்களது உரிமைகளை எந்தவகையிலும் விட்டுக் கொடுக்காமல் கடந்த 35 வருட காலத்துக்கும் மேலாக அவர்களது போராட்டத்தை தலைமையேற்று நடத்தி வருவதன் மூலமே இந்தப் பொறுப்பு நிலையை நாம் பெற்றிருக்கின்றோம்.

போர்க் களங்களில் பின்னடைவுகளும் முன்னேற்றங்களும் தவிர்க்க முடியாதவை. இறுதியாக நாம் எதனை அடைகின்றோம் என்பதுதான் முக்கியமானது. விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலம் ஒன்று வரும் எனக் காத்திருந்து காலத்தை வீணாக்குவதற்குப் பதிலாக எமது மக்களுடைய சுயநிர்ணய உரிமை மற்றும் தாயகத்துக்கான போராட்டத்தை அங்கீகரித்து அவர்களுடைய அரசியல் விருப்புக்களை நிறைவேற்றுவதில் தமது கவனத்தைச் செலுத்துமாறு அனைத்துலக சமூகத்தையும் இந்தியாவையும் நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் விடுதலைப் புலிகளுக்குப் பின்னான காலகட்டம் என ஒன்று ஒரு போதும் வரப்போவதில்லை.

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உயிருடன் பிடிப்பதற்கு சிறிலங்காப் படைகள் முயற்சி செய்வதாக் வெளியான செய்திகள் தொடர்பில் அவரின் (பிரபாகரனின்) பிரதிபலிப்புக்கள் எவ்வாறு உள்ளன?**

இந்தச் செய்திகளைப் பார்த்து அவர் சிரிக்கின்றார்.

**ஈழத்தை அடைய முடியும் என பிரபாகரன் இப்போதும் நம்புகின்றாரா?**

அவர் அவ்வாறு நம்பவில்லை என்றால், இந்தப் போராட்டத்தை அவர் எப்போதோ கைவிட்டிருப்பார்.

**விடுதலைப் புலிகளுடனான இந்த போரில் சிறிலங்கா படையினருடன் இந்தியப் படையினரும் இணைந்து போர் புரிகின்றனரா?**

சிறிலங்கா மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் மிக உயர்ந்த மட்டத்தில் இராணுவம் சார்ந்த ஒத்துழைப்பு இருக்கின்றது என்பதை என்னால் சொல்ல முடியும்.

**பொதுமக்களை மனிதக் கேடயங்களாக விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றார்கள் என்பதையிட்டு உங்களுடைய பதில் என்ன?**

சிறிலங்கா அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் தம் மீது பிரயோகிக்கப்படுகின்றமை பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அவ்வாறு ஒடுக்குமுறையைப் பிரயோகிக்கும் அந்த அரசாங்கத்தின் கைகளில் அகப்பட அவர்கள் விரும்பாத நிலையில் இங்கு வாழும் மக்களை போருக்குள் சிக்குண்டவர்கள் என்றோ அல்லது மனித கேடயங்கள் என்றோ குறிப்பிடுவது பொருத்தமற்றது.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் இந்தப் பகுதிக்கு வந்து மக்களுடைய விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

**போர் நிறுத்தம் ஒன்றுக்குத் தயாராக இருப்பதாக நீங்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றீர்கள். இது உங்களுடைய பலவீனத்தின் அடையாளமா?**

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை போரை அரசாங்கம் தீவிரப்படுத்தியிருப்பதால்தான் நாம் போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தி வருகின்றோம்.

மனிதாபிமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் மக்கள் இப்போது தாம் வசிக்கும் பகுதிகளிலேயே அத்தியாவசிய நிவாரணப் பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும் போர் நிறுத்தம் ஒன்று அவசியமாகும்.

**அனைத்துலக சமூகத்துக்கான உங்களுடைய கோரிக்கை என்ன?**

அப்பாவிச் சிறுவர்கள், தாய்மார் மற்றும் பெரியவர்கள் ஆயுதப் படைகளால் நாளாந்தம் படுகொலை செய்யப்படுகின்றனர். அதனால் தான் ஒரு போர் நிறுத்தத்தை நோக்கி சிறிலங்கா அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டிய அவசர தேவை உள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களை வேரறுக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுடன் இணைந்து போக வேண்டாம் என அனைத்துலக சமூகத்தை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த போரை உடனடியாக நிறுத்தி தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு பேச்சுவார்த்தை ஒன்றுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அனைத்துலக சமூகத்தை நாம் கேட்டுக் கொள்கின்றோம். (ந-5)


## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், பாடசாலை வீதியில் 3 பரப்புக் காணியில் 3 அறைகள், கிணறு, குளியலறையுடன் கூடிய, இருபுறமும் சுற்று மதில் கொண்டதும் மூன்று பக்கமும் பாதை அமைக்கக் கூடியதுமான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 011-2542897
0176547856

(C-2293)

# நிறுவன தின விழாவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

IIS நிறுவனத்தின் பதின்மூன்றாவது நிறுவன தின விழாவும் சான்றி தழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி ஜீபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குனர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆண்டுதோறும் வழங்கப்படுவது போல் சிறப்பு சித்தியெய்திய சி. பாகினி, இ.கவிதா, சு. அருட்சுதா, க. எழிலரசி, ச. ஜெயகிருஸ்ணா, கு. கஜந்தன் ஆகிய மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும், அதி உயர் விருதாக அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் தங்கப்பதக்கம் ப. சஞ்சீவனுக்கும் வழங்கப்படவுள்ளது. (ஓ-6)

# சாரதி பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நல்லூர் பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள சாரதி பதவிக்கு சமயா சமய அடிப்படையில் ஊழியரை நியமனம் செய்வதற்காக நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப் பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்படிவத்தை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து *செயலாளர் நல்லூர் பிரதேச சபை* எனும் விலா சத்திற்கு *மே மாதம் 5ஆம்* திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும். மேலதிக தகவல்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அறிந்த கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்த சீலன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

# க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**புனித பத்திரிசியார் கல்லூரி**
**ஆங்கில மொழி மூலம்**

எஸ். செல்வ நித்திலன் - 8A,C,ஜெ. எவ். ஜெகார்த்தன்- 3A,B,5C, ஏ. நிஷாந்தன்- 3A, 3B,3C, வி. அன்ரனி ஜெரோன்- 3A,2B,4C, எஸ். ஜெ. சஞ்சீவ்ராஜ்- 3A,2B,3C,S, ரி. பிரிட்னோ பிரகீஷ் - 3A,3B,3C, ஜெ. பற்றிக் எரிக்பிரதாப் - 3A,3B,2C,S, எம். ஏ. டிஷான் - 3A,3B,2C,S,ஜெ. அன்ரனி மேரிசன்- 3A,4B,2C.

**தமிழ் மொழி மூலம்**

எஸ். கிறிஸ்ரி அன்றொயின் - 6A,B,C,S, பி. ஜெயதிலீப் - 6A,2B,S, எம். தர்ஷன் - 6A, B,C,S, இ. ஜே.எஸ்.பி. அர்ஜீன் கிறிஸ்ரி - 5A,B,2C, ஆர். கேதுஷன்- 5A,2B,C,S, ஏ.வி. பி. துஷான் - 4A,5B, எம். சஜந்தன்- 4A,4B, சி. ஜொனிசான் - 3A,B,C,2S, யு. சுஜிகரன் - 3A,4B,C, வி. ஏ. மசனட்டினோர்த் - 3A,6B, எஸ். மாலவன் - 3A,2B,2C,S, ஜெ. பார்த்தீபன்- 3A,B,4C,S.

**நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**

ஏ. மயூரனன்- 6A,2B,C, ஆர். கோகுலன்- 6A,B,C, எஸ். இராஜ்குமார்- 5A,B,2S, பி. மதுளதாஸ் - 4A,2B.C.S. ர. உதயனா - 3A,5B,C, எஸ். அச்சுதன் - 3A,2B,C,2S, ஆர். ராகுலன்- 3A,3B,2C, பி. தயாகரன் - 3A,B,3C,S, பி. விஸ்ணுபிரியன்- 3A,2B, 3C,S, கே. திவ்யா - 3A,B,4C, கே. தர்மிதன் - 3A,B,C,3S. (ஓ)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கு உதவி

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்வோர்க்கு உதவும் வகையில் கரவெட்டி யாக்கரைப் பிள்ளையார் கோயில் தீர்த்தத் திருவிழா உபயகாரர்களான ஐ. இரத்தினம், ஐ. தருமலிங்கம், ஆகியோர் 50 ஆயிரம் ரூபா பணத்தினை இந்து சமயப் பேரவை தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்துள்ளதாக இந்து சமயப் பேரவை செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுபோன்று தர்ம சிந்தை படைத்த ஏனையோர் இப்பணிக்கு உதவுவது தலையாய உடமையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# பங்குனித் திங்கள் உற்சவம்

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய ஐந்தாம் பங்குனித்திங்கள் உற்சவம் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ் உற்சவத்தில் அபிஷேகம், விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று மதியம் கஞ்சி வார்ப்பு இடம்பெறும்.

இவ் உற்சவம் பொதுமக்கள் உற்சவமாதலால் அடியார்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்துள்ள, வரவுள்ள மக்களுக்கான இடருதவிக் கொடுப்பனவுக்கான உண்டியல் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உதவி செய்ய விரும்பும் அடியவர்கள் உதவி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபைத் தலைவர் தி. ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார். (ஓ)

# இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அன்பளிப்பு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டில் அகதி முகாம்களில் தற்காலிகமாக சிறுகுழந்தைகளுடன் அவதியுறும் தாய்மாருக்கு உதவும் பொருட்டு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான 222 சுடுநீர் போத்தல்களை யாழ் அரச அதிபர் கே. கணேஷ்டம் தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் ஆறு திருமுருகன் நேற்று கையளித்துள்ளார்.

மேற்படி தேவஸ்தானம் தொடர்ந்து அல்லற்படும் மக்களுக்கு உதவிகளைச் செய்ய ஏற்பாடு செய்து வருவதாகவும் நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஓ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 60 | 60 |
| தக்காளி | 80 | 80 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 20 | 40 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 35-40 | 40 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 |
| பாகற்காய் | 60 | 60 |
| வெண்டிக்காய் | 20-40 | 50-60 |
| கரணைக் கிழங்கு | 30 | 50 |
| பயிற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 110 | 120 |
| போஞ்சி | -- | -- |
| கீரை - 1 பிடி | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 |

# வாரம் ஒரு தகவல்

# கணக்கு சரியா?

"சேர்! எங்க அப்பாதான் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்?"

"என்ன விஷயம்?"

"நான் கணக்கில ரொம்ப 'வீக்' காம். அதற்காக உங்களிடம் டியூஷன் எடுக்க வேண்டுமாம்."

"சரியான இடத்துக்குத்தான் அவர் உன்னை அனுப்பி வைத்திருக்கிறார். என்னிடம் வந்துவிடாய், அல்லவா! இனிமேல் நீ கணக்கில் 'வீக்' இல்லை. கணக்கில் புலியாக ஆக்கிவிடுகிறேன். கவலைப்படாதே! இருந்தாலும் ஒரு அட்வைஸ்"

"என்ன சேர்? சொல்லுங்க!"

"தினமும் வெண்டிக்காய் சாப்பிடு"

"ஏன்?"

"ஞாபக சக்திக்கு அது நல்லது!"

"எல்லோரும் சொல்கிறார்கள் தான் அது உண்மையா சேர்?"

"கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி கேரிலிங் கூட அப்படித்தான் சொல்கிறார்."

"எப்படி?"

"மனிதனுடைய அபாரமான நினைவாற்றலுக்கு மூளையிலுள்ள கால்பெய்ன் என்ற நொதியே காரணம் என்கிறார். இந்த நொதியை ஊக்குவிக்கும் மூலப் பொருள் வெண்டிக்காயில் இருக்கிறதாம். அதனால் தான் கணக்கில் வீக்காக இருப்பவர்களை வெண்டிக்காய் சாப்பிடச் சொல்கிறார்கள்."

"நான் ஒன்றும் அந்தளவிற்கு வீக் இல்லை. அப்பாதான் அப்படிச் சொல்கிறார்."

"சரி. நான் இப்பொழுது ஒரு கணக்கு கேட்கிறேன் சொல். பார்க்கலாம்"

"சரி சேர்"

"உங்கள் அப்பா என்னிடம் 100 ரூபா கடனாக வாங்கியிருக்கிறார். மாதம் 10 ரூபா வீதம் அதை எனக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆறு மாதத்தின் பின் அவர் எனக்கு எவ்வளவு தரவேண்டும்?"

"எதுவும் இல்லை சேர்"

"சரியாக கணக்குப் போட்டுச் சொல்"

"சரியாகத்தான் சேர் சொல்கிறேன்"

"உனக்கு கணக்கே தெரியவில்லை."

"உங்களுக்கு எங்க அப்பாவின் குணம் தெரியவில்லையே"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

*12.04.2009*
*(பங்குனி 30, ஞாயிற்றுக்கிழமை)*
*திருதியை முன்னிரவு 10.03 மணிவரை*
*விசாகம் முன்னிரவு 6.59 மணிவரை*
*இராகுகாலம் 4.36-6.06 மணிவரை*
*சுபநேரம் 9.06-10.36 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், வாகன பயம், வீண் பகை, போசன சுகம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, தன்னம்பிக்கை, தெய்வானுகூலம், விருந்துபசாரம். |
| மிதுனம் | சுகவாழ்வு, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், நல்ல தகவல். |
| கடகம் | புத்திரரால் மனஸ்தாபம், தொழில் சிந்தை, பணக்குறைவு, ரோகநிலை. |
| சிங்கம் | சுபநிகழ்வு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தெய்வ சிந்தை. |
| கன்னி | சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | வீண் விவாதம், தனவிரயம், தொழில் சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி பலிதம். |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, வாக்கு மேன்மை, சயன சுகக்குறைவு. |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, பாராட்டு, குடும்ப சுகம். |
| கும்பம் | மேன்மை, பொருள் சேர்க்கை, நல்ல செய்தி, காரிய அனுகூலம். |
| மீனம் | புதிய திட்டமிடல், திடீர் பயணம், எதிர்பாராத செலவு, பிதாசிந்தை. |

வளவன்

# திருவிழா

(ஊர்காவற்றுறை)

நாராந்தனை தூய இராயப்பர் தூய சின்னப்பர் அப்போஸ்தலர்களின் திருவிழா ஆயத்த வழிபாடுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை திருப்பலி இடம் பெறவுள்ளது. (ஓ-72)

# ம(ற)றந்த மொழி!

அழுது கண்ணீர் வற்றிப் போச்சு!
அவல நிலையோ மெத்திப் போச்சு!
உயிரைக் காப்பதற்கு
உறவை இழந்து
ஊரை இழந்து
உடமை இழந்து!
ஐயகோ?
கருவில் குழந்தையோ?
குருதி மழையிலே!
மெலிந்த உடலங்கள்
ஓடி ஓடி மேனியெங்கும் புழுதியாச்சு!
நொடிப் பொழுதில் - பல
உயிர் குடிக்கும்...
தாய் மொழி மறந்து!
அழுகை மொழி பிறந்து!
அதுவும் மறந்த அவல நிலை!
எம் உறவின் நிலையோ?
விழுந்தவன் மேல் மாடு மிதித்தாற்போல்!

கலட்டியூர் கஜா

# போலி விசா மூலம் வெளிநாடு செல்ல முற்பட்டவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(கொழும்பு)

போலி விசா பதிக்கப்பட்ட கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக வெளிநாட்டுக்குச் செல்ல முயன்ற குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு நீர்கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் 50 ஆயிரம் ரூபா அபராதமும் 10 வருட கடூழியசிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே மேற்படி தண்டனையும் அபராதமும் நீதிபதியால் விதிக்கப்பட்டது. பிரதிவாதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து டோஹா கட்டார் ஊடாக ஜேர்மனுக்கு செல்ல முற்பட்ட போது டோஹா கட்டார் அதிகாரிகள் அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்பியிருந்தனர்.

கடவுச்சீட்டில் போலி விசா மற்றும் போலி முத்திரை பதிக்கப்பட்டிருப்பது குற்றப் புலனாய்வுத் திணைக்கள விமான நிலைய பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதையடுத்தே குற்றவாளிக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது. (ஓ-6)

# பல்கலைக்கழக மாணவனுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

## கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

சக மாணவனின் மரணத்திற்கு காரண மானவர் என்ற வழக்கில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல் கலைக்கழக மாணவன் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது. மேலும் இக் குற்றவாளி மரணமான மாணவனின் குடும்பத்திற்கு ரூபா 4 இலட்சத்து 50 ஆயிரத்தை நஷ்ட ஈடாக வழங்குவதுடன் மன்றுக்கு தண்டப்பணமாக ரூபா 5 ஆயிரம் செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிட்டது.

இதேநேரம் மேலும் ஒரு சக மாணவனுக்கு வாளால் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டதால் இக் குற்றத்துக்காக இவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிப்பதாகவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இக் குற்றச் செயலுக்காக குற்றவாளி காயப்பட்ட மாணவனுக்கு ரூபா 50 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்குவதுடன் மன்றுக்கு அபாரதப் பணமாக மற்றுமொரு 5 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவக் குழுக்களிடையே 04.06.2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட மோதல் ஒன்றின் போது சம்பத் டபிள்யூ பண்டார என்ற சக மாணவன் வாள்வெட்டில் கொல்லப்படுவதற்கும் இன்னொரு சகமாணவன் காயப்படுவதற்கும் எதிரி காரணமாகியுள்ளார் என சாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணமாகியுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# அடை மழையால் வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் உள்ளோர் பாதிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் கடந்த இரண்டு தினங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பெய்யும் அடைமழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் நிவாரண நிலையங்களின் கொட்டில்களில் மழை நீர் புகுந்திருப்பதனால் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

வவுனியா காமினி மகாவித்தியாலய மைதானத்தில் இருந்த கொட்டில்களில் தங்கியிருந்த 200 பாதிக்கப்பட்ட குடும்பங்களை மனிக்பாம் கதிர்காமர் நிவாரண கிராமத்திற்கு இடம் மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மழை காரணமாக கொட்டில்களில் நீர் புகுந்ததையடுத்து இந்தக் குடும்பங்கள் அனைத்தும் பாடசாலை மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அங்கு இடநெருக்கடி காரணமாக அந்த மக்கள் இரவு முழுவதும் படுப்பதற்கு இடமின்றி நிலத்தில் நெருக்கமாக அமர்ந்த வண்ணமே இரவைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று சைவப் பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழை காரணமாக, இடம் பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரிய நிலைமை தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் அதிகாரிகள் கூடி விரிவாக நேற்று முன்தினம் ஆராய்ந்துள்ளனர். (ஓ-6)

# பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட அரச ஊழியர்களுக்கு முற்பணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் பெய்த கடும் மழை மற்றும் கடும்புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட அரச ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் முற்பணமாக வழங்கப்படும். இந்தத் தொகையை அவர்கள் 10 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். (ஓ-6)

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
யாழ் பல்மூக்கு கண்ணாடியகம்
சித்திரைப் புத்தாண்டு சிறப்பு தள்ளுபடி
கண் பரிசோதித்து நவீன பிறேம்களில் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
காலநிலைக்கு ஏற்ப கலர் மாறக்கூடிய சண்கிளாஸ் வகைகளை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்
அதி சிறந்த வகையான சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்
மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்
பிறேம் அற்ற (Rim Less) கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
கணனி பாவனையாளர்களுக்கு ஏற்றாபோல் ஒளி எதிர்ப்பு கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும் (Multi Coated)
நீங்கள் நாடவேண்டி ஸ்தாபனம்
யாழ் பல்மூக்கு கண்ணாடியகம்
பிரதான வீதி, ...ம் குறுக்குத் தெரு, நெல்லியடி. பழைய சந்தை முன்பாக
கிளை: யாழ். வீதி, உடுப்பிட்டி, T.P.077-5188867

# நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை விரைவில் நிவாரணக் கிராமங்களுக்கு மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் மோதல்களால் அங்கிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை விரைவில் நிவாரணக் கிராமங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினருடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் நேரில் சந்திப்பதற்காக நலன்புரி நிலையங்களில் வரவேற்பறைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியில் இருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு இதுவரை 66 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்துள்ளனர். அத்துடன் காயமடைந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட நோயாளர்களுடன் வந்த நெருங்கிய உறவினர்களும் சிகிச்சைபெற்ற நோயாளர்களும் கட்டம் கட்டமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் உள்ளிட்ட இடங்களில் அமைக்கப்பட்ட 15 நலன்புரி கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வெளிநாட்டில் உள்ள தங்களது உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சர்வதேச தொலைத் தொடர்பாடல் வசதிகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

அதேநேரம் இடம்பெயர்ந்து நலன் புரி முகாம்களிலுள்ளோரை உறவினர்கள் நேரடியாக வந்து சந்திப்பதற்காக விஷேட வரவேற்பறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அடுத்த வாரம் முதல் இவ்வாறு உறவினர்கள் இடம்பெயர்ந்தோரை சந்திக்கக் கூடியதாக இருக்கும்.

நலன்புரி முகாம்களின் நிர்வாகம் படிப்படியாக எமது அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொடர்பாடல் ஒருங்கிணைப்பாளர்களாக இடம்பெயர்ந்த இளைஞர்களே நியமிக்கப்பட்டுள்ளதாலும் இச் சந்திப்பில் சிரமங்கள் இருக்காது எனக் கருதுகிறேன்.

இதேவேளை அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து வருவதன் காரணமாக பூவரசன் குளம் மற்றும் தாண்டிக்குளத்தில் இரு தற்காலிக முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. எவ்வாறிருந்தபோதிலும் நீண்டகாலத்திற்கு இம் மக்களை நலன்புரி முகாம்களில் வைத்திருக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை. கூடிய விரைவில் நிவாரணக் கிராமங்களை அமைத்து அவர்களை அங்கு குடியமர்த்துவதே எமது திட்டமாகும் என்றார். (ஓ-6)



அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நல்லூரில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய மண்டபத்தில் நடாத்தப்பட்ட பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் நிறைமதி நாள் கருத்தரங்கின் மூன்றாவது அமர்வில் யாழ்.சைவ சித்தாந்த முதுகலைமாணிக் கற்கை மாணவன் கு.ரஜீபன் மங்கல விளக்கேற்றுவதையும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கருத்துரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 120

## சிங்களவரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் 1070 – 1200

திருகோணமலைக்கு வடக்கே திரியாயில் இருந்த பௌத்த பள்ளியின் அழிபாடுகளில் பெருந்தொகையான பௌத்த சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைத்த பல போதிசத்துவர் விக்கிரகங்களுள் அவலோகிதேஸ்வரர் மற்றும் மைத்ரேயர் ஆகியோரது அழகிய சிற்பங்கள் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுப் பாணியில் உள்ளன. பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலச் சமாதி புத்தர் சிலைகள் திருக்கோயிலில் கிடைத்துள்ளன. இவை சோழர் சிற்பப் பாணியில் அமைந்துள்ளன.

இவற்றுள் ஒன்று நாகபட்டினத்தில் கிடைத்த அழகிய சோழர் சிற்பப் பாணியில் அமைந்த வெண்கலப் புத்தர் சிலையை ஒத்தது. தமிழ்நாட்டுச் சிற்பிகள் ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளிலும் அதற்குப் பின்னரும் கிழக்கு இலங்கையில் பணியாற்றினர் என்பதற்குப் போதிய தொல்லியல் சான்றுகள் உள்ளன.

இவ்வாறு தமிழ்நாட்டுக் கலைப்பாணியில் விக்கிரகங்கள் அமைத்த சிற்பிகள் இலங்கையின் பௌத்த சிற்பக் கலை வளர்ச்சியில் கொண்டிருந்த பங்கு சுட்டிக்காட்டப்படாது பொதுவாக மறைக்கப்படும் போக்கு இலங்கை விமர்சகர்களைப் பொறுத்துக் காணப்படும் ஒரு பண்பாகும். தமிழ்நாட்டுச் சிற்பப் பாணியில் அமைந்துள்ள சிற்பங்களை வர்ணிக்கும் போது இலங்கையில் மஹாயானச் சிற்பங்கள் அதேகாலத் தென்னிந்தியப் பாணியை நினைவுபடுத்துபவை என மெதுவாகத் தட்டிக் கழிக்கும் வர்ணனைகள் உண்மை நிலையை மறைக்கின்றன.

இலங்கையில் பல்லவ கிரந்தத்தில் எழுதப்பட்டவையாய்க் கிடைத்த மஹாயான சமஸ்கிருத கல்வெட்டுக்களுடன் சேர்த்து மஹாயான விக்கிரகங்களையும் நோக்குமிடத்து, தமிழ்நாட்டுச் சிற்பிகள் ஐயத்துக்கு இடமின்றி இலங்கையில், சிறப்பாக வடகிழக்கில், செயலாற்றினர் என்றும் அவர்களுக்கும் உள்ளூர்ச் சிற்பிகளுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்தது என்றும் கூற முடியும்.

இப் பின்னணியிலே பார்த்தால், இந்த உறவு பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலும் தொடர்ந்து நீடித்தது என்பதை உணரலாம். இக் காலப் பகுதியின் இலங்கைச் சிற்பங்களை ஆழமாக ஆய்வு செய்த உல்ரிஹ் வென் ஷ்ரொய்டர் என்ற அறிஞர் இவை பற்றிக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

(சோழர் ஆட்சியிலிருந்து) விடுதலை பெற்ற பின் பொலநறுவைக் காலத்துப் பௌத்தக் கலை அக்காலத்தில் சிறப்பாகத் தென்னிந்தியாவில் வழக்கில் இருந்த கலைப் பாணிகளின் செல்வாக்கைப் பெரிதும் பெற்றிருந்தது என்பதில் ஐயம் எதுவும் இல்லை... பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் இலங்கையில் நடந்த பௌத்தக் கலை மறுமலர்ச்சியில் தென்னிந்தியர் வழிவந்த கலைஞர்கள் பங்கு கொண்டிருப்பர் எனலாம்.

பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் சிற்பப் படைப்புகளைத் தென்னிந்தியா–இலங்கை என்ற பெரும் பிராந்தியப் பின்னணியில் வைத்து நோக்கினால், பௌத்த சிற்பங்களைச் சிங்களவர் படைப்பாகவும் சைவச் சிற்பங்களைத் தமிழர் படைப்பாகவும் கருதும் குறுகிய நோக்கைக் கைவிடமுடியும். பொலநறுவையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு சைவச் சிற்பங்கள் கண்டறியப்பட்டது தொட்டு இவை தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாக்கப்பட்டவையா அல்லது இலங்கையில் வார்க்கப்பட்டவையா என்ற தகராறு இருந்து வந்துள்ளது. இவை பௌத்த சிற்பங்களல்லாதவை என்ற காரணத்தாலும் தென்னிந்தியாவில் வளர்ந்த ஒரு கலை மரபைச் சேர்ந்தவை என்பதாலும் இவற்றை இலங்கைக்குப் புறம்பானவை என்று கொள்ளும் மனப்பான்மை பொதுவாகக் காணப்பட்டது.

ஆனால், அரசியல் எல்லைகளை மீறிப் பண்பாட்டுச் செயல்களும் பொருளியல் செயல்களும் நடைபெற்ற ஒரு பிராந்தியத்தின் படைப்புகள் இவை என்று இச் சிற்பங்களை நோக்கினால் இவற்றை இலங்கைக்குப் புறம்பானவை என்று தள்ளிவிட வேண்டிய அவசியம் ஏற்படாது. இவை இலங்கை கலை மரபுக்குப் புறம்பானவை என்ற நோக்கு அண்மைக் காலத்தில் மாறத் தொடங்கியுள்ளது.

தொல்லியல் ஆணையாளராகக் கடமையாற்றிய சீ.ஈ.கொடக்கும்புர 1960 களில் இச் சிற்பங்களை ஆய்வு செய்தபோது இவை இலங்கைச் சிற்பிகளால் வார்க்கப்பட்டவை என்ற வாதத்தை முன்வைத்தார். அவருக்குப் பின் ஸிரிநிமல் லக்தூஸிங்ஹ இக் கருத்தை ஆதரித்து, இலங்கையில் இருந்த சிற்பிகளின் தனித்துவ மரபு இவற்றில் வெளிப்படுவதாக வலியுறுத்தியுள்ளார். இக் காலத்து வெண்கலச் சிற்பங்கள் சிங்களச் சிற்பிகளும் தமிழ்ச் சிற்பிகளும் படைத்தவை என்பதில் ஐயமில்லை.

இவற்றை ஆய்வுசெய்த இந்தியக் கலை விமர்சகராகிய சீ.சிவராமமூர்த்தி இவற்றில் தமிழ்நாட்டுச் சிற்பங்களில் காணப்படாத பண்புகள் சில இருப்பதைச் சுட்டிக்காட்டி, "இவை ஐயத்துக்கு இடமின்றி இலங்கைக் கலைஞர்களுடைய படைப்புக்கள்" என முடிவு கூறியுள்ளார்.

பௌத்த கட்டடங்களை எழுப்புவதற்குத் தமிழ் சிற்பிகளும் தொண்டாற்றினர் என்பதைக் காட்டும் சிற்பிகள் குறிகள் கட்டடங்களின் கற்களில் காணப்படுவது போல், சிங்களச் சிற்பிகள் சைவ விக்கிரகங்களை வார்த்து உதவியமைக்கு ஒரு சிங்களக் கல்வெட்டின் சான்று கிடைத்துள்ளது. சைவ மதத்தைத் தழுவி ஆதரித்த பொலநறுவை மன்னனாகிய இரண்டாம் கஜபாகு சைவக் கிரியையாகிய லக்ஷ பூஜை ஒன்றை நடத்து வதற்காக ஸ்கந்த விக்கிரகம் போன்ற சைவ விக்கிரகங்கள் சிலவற்றை வார்த்துப் பணிபுரிந்த சிங்களச் சிற்பி ஒருவனுக்கு வழங்கிய கொடை

பேராசிரியர்
கா. இந்திரபாலா

யைப் பதிவுசெய்யும் கல்வெட்டு ஒன்று உள்ளது. சிங்களச் சிற்பிகளும் சைவ விக்கிரகங்களை வார்த்தனர் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று இல்லை.

### நீர்ப்பாசனவியல்

பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வளர்ந்த இலங்கை நாகரிகத்தின் கூறுகளுள் மிக உன்னதமானது நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தின் சாதனை எனலாம். இது உலக நாகரிகத்தில் இலங்கைக்கும் பெருமைப்படக் கூடிய ஓர் இடத்தைப் பெற்றுக் கொடுத்தது.

அத்துடன் இக்காலப் பண்பாட்டுத் துறையின் சாதனைகளுக்குத் தளமாக அமைந்த பொருளியல் வளத்தையும் இச் சாதனை கொடுத்து உதவியது. இத்துறையிலும் சிங்கள– தமிழ் மக்கள் ஒத்துழைப்புக் காணப்பட்டது.

(தொடரும்)

# யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களும் பொதுமக்களும்

இலங்கையில் வடபகுதியில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தம் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து மேலும் விரிவடைந்து வருவதனால் ஏராளமான சிறுவர்களும், பொதுமக்களும் பெரும்பாதிப்புக்குள்ளாகின்றார்கள். இவர்களில் பலர் தொடர்ந்து யுத்தப்பிரதேசங்களில் இருந்து தப்பிச்செல்வதற்கு பெரும் முயற்சி மேற்கொண்டு வருகின்றார்கள்.

யுத்தம் நடைபெறும் பிரதேசத்தில் இருந்த இடம்பெயர்ந்து பாதுகாப்பான அரசாங்கப் பகுதிகளுக்கு பிரவேசித்த 57ஆயிரம் பேருக்கும் அதிகமானோரில் 12ஆயிரம் பேர் பாடசாலை சிறுவர்களாவர் என்று வவுனியாப் பிரதேச கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின் றனர்.

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மேலும் பெருமளவு சிறுவர்களும் பொதுமக்களும் காயப்படுதல் , உயிரிழப்பு போன்ற ஆபத்துகளுக்கு உள்ளாகின்றார்கள். இலாபநோக்கற்ற அமைப்பான சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வவுனியாவில் 17 இடைத்தங்கல் நிலையங்களில் தற்காலிக கற்றல் பிரிவுகளை அமைக்க உதவியுள்ளது. யுத்தத்திலிருந்து தப்பி வந்த 44 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் இதுவரை 10 இடைத்தங்கல் நிலையங்களில் கற்றல் பிரிவுகளை ஆரம்பித்துள்ளது.

சிறுவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதிப்படுத்த தாங்கள் முயன்று வருவதாக தெரிவித்த சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அசோக்குமார் தாங்கள் கற்றல் உபகரணங்களையும் வேறு உதவிகளையும் வழங்கி வருவதாகவும் கூறினார்.

காலை உணவையும் வழங்கி வரும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வகுப்புகளை நடத்துவதற்காக இடம்பெயர்ந்தவர்களில் இருந்து 48 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியும் அளித்துள்ளது. நிலைமை மிகவும் கஷ்டமாக இருக்கின்ற போதிலும் பிள்ளைகள் அவர்களது கல்வியைத் தொடர்வதற்கு தமது நிறுவனம் தொடர்ந்து உதவும் என்றும் அவர் கூறினார்.

யுத்தத்தினால் குறைந்தது 60 ஆயிரம் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. கல்வியிலும் சிறுவர் வாழ்விலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு மிகவும் பாராதூரமானது என்று நிறுவனத்தின் பேச்சாளர் மேனகா கல்யாண ரத்ன தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு நகரின் கிழக்குப்பகுதியில் நடைபெறும் கடும் சண்டையில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் சிக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் இத்தொகையை சுமார் 70 ஆயிரம் ஆக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.

மார்ச் மாதத்தின் கடைசி வாரத்தில் 7ஆயிரத்துக்கும் அதிகமானோர் அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு வந்துசேர்ந்துள்ளனர் என்று மனித உரிமைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார். மேலும் பலர் வருவார்கள் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பேச்சாளர் கோர்டன் வொய்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

போர்ப்பகுதியில் சிக்கியுள்ள மேலும் பலர் தப்பி வருவதற்கு முயற்சிப்பார்கள் என்று தெரிவித்தார். யுத்தப்பிரதேசங்களுக்கு வெளியிலேயே அவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று அவர் கூறினார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவும் கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து இலங்கை கடற்படையின் உதவியுடன் 6ஆயிரத்து 600 காயமடைந்தோரையும் நோயுற்றவர்களையும் யுத்தப்பிரதேசங்களில் இருந்து கடல் மார்க்கமாக வெளியே கொண்டு வந்துள்ளது. கடும் சண்டை காரணமாக கடந்த ஜனவரி மாத பிற்பகுதியில் இருந்து தரை மார்க்க வாகன பவனிகள் செல்ல முடியா திருப்பது குறிப்பிடத்தக்கது. உலக உணவுத்திட்ட நிவாரணமும் உணவு மற்றும் நிவாரணப்பொருட்களை ஏற்றிச் செல்ல படகுச்சேவையைப் பயன்படுத்தி வருகிறது.

பெப்ரவரி மாதத்தில் இருந்து 4 ஆயிரத்து 200 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான உணவுப்பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாக உலக உணவுத்திட்டப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வாரம் இந்நிறுவனம் மிகப் பெரும் தொகையான ஆயிரம் மெற்றிக் தொன் நிவாரணப்பொருட்களை கப்பலில் அனுப்பியுள்ளது.

அப்பகுதி மக்களின் மிக்க இக்கட்டான நிலைமையில் தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட மிகப்பெரும் தொகை இதுவாகும் என்று உலக உணவுத்திட்டப்பிரிவின் இலங்கை அதிபர் அத்னான் கான் தெரிவித்தார்.

யுத்தப்பிரதேசத்தினுள் தொடர்ந்தும் இருப்பவர்கள் யுத்த வலயத்தின் எல்லையில் நிறுவப்பட்டுள்ள 12 கிலோ மீற்றர் யுத்த சூனிய வலயத்தினுள் முடங்கிக்கிடக்கின்றார்கள்.

யுத்த சூனிய வலயம் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் விடுதலைப்புலிகள் பின்வாங்கி இந்த வலயத்தினுள் புகுந்து சிவிலியன்களை கேடயமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள் என்று பாதுகாப்பு அமைச்சும் இராணுவமும் தற்போது தெரிவித்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் யுத்தப்பிரதேசத்தினுள் நிலைமை மிக மோசமாக இருக்கின்றது என்று எச்சரிக்கை செய்துள்ளன. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்கீமூன் யுத்தப்பிரதேசத்தில் இருந்து சிவிலியன்கள் அவர்களது விருப்பப்படி வெளியேறுவதற்கு இடமளிக்குமாறு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி விடுதலைப்புலிகளிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சிவிலியன்கள் பெருமளவு உயிர்ச்சேதங்களை எதிர்கொள்வதுடன் போர் ஆபத்தில் சிக்கியுள்ளனர் என்றும் கடும் சண்டை நடைபெறும் மிகக் குறுகியப்பிரதேசத்தினுள் புலிகள் சிவிலியன்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாக முடக்கி வைத்திருக்கிறார்கள் என்றும் இலங்கையின் வன்னிப்பிராந்தியத்தில் இருந்து தொடர்ச்சியாக வெளிவரும் அறிக்கைகள் காரணமாக ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினுள் சிறுவர் சேர்க்கப்பட்டு யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. சிவிலியன்கள் அவர்களது சொந்த விருப்பப்படி யுத்தப்பிரதேசத்தில் இருந்து வெளியேற அனுமதிக்குமாறு செயலாளர் நாயகம் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்திடம் கேட்டுள்ளார். சிவிலியன்களின் நடமாடும் சுதந்திரம் மீது புலிகள் கண்டிப்பாக இருப்பது சர்வதேசசட்டத்தை மீறும் செயலாகும்.

சிவிலியன்களை அதுவும் சிறுவர்களை பலவந்தமாக இயக்கத்தில் சேர்ப்பது குறித்தும் அவர் கடும் கண்டம் தெரிவித்துள் ளார்.

படகு சேவை காரணமாக யுத்த சூனிய வலயத்தினுள் சென்று வரும் செஞ்சிலு வைச்சங்க சர்வதேசக்குழுவும் அங்கு நிலை மை மிக மோசமாக இருப்பதாக எச்சரிக்கை செய்துள்ளது. பல சிவிலியன்கள் ஏவுகணை காயம் காரணமாக அங்கங்களை அகற்றும் நிலைமைக்கும் உள்ளாகியுள்ளார்கள். அகற்றப்படும் அங்கங்கள் தவிர்ந்த ஏனைய அங்கங்களிலும் ஏவுகணைச் சிதறல்களை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி வருகிறோம் என்று இடம்பெயர்ந்த சிவிலியன்களுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச்சங்க மருத்துவர் மாட்டின் ஹேர்மன் தெரிவித்தார்.

ஐ.பி.எஸ்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த (சா/த) 2008 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகளை அறியப் பலரும் ஆவல் கொண்டிருப்பதுடன், இவை பற்றிய பல கண்ணோட்டத்தில் திறனாய்வு செய்வதும் நிகழ்ந்து வருகின்றது. இதனால் இக் கல்லூரியின் பெறு பேறுகள் பலரின் கவனத்தை ஈர்த்து நிற்கின்றன.

க.பொ.த(சா/த) 2008 பரீட்சைக்கு இக் கல்லூரியிலிருந்து 200 மாணவர்கள் முதல் தடவை யாகத் தோற்றினர். இவர்களுள் 150 பேர் தமிழ்மொழி மூலமும், 50 பேர் ஆங்கில மொழிமூலமும் தோற்றினர்.

2003 ஆம் ஆண்டில் - 51 வருடங்களுக்குப் பின் ஆறாம் ஆண்டில் மீண்டும் ஆங்கில மொழிமூலப் போதனையும் ஆரம்பமாகியது. ஆங்கில மொழிமூலப் போதனையை மேற்கொண்ட மாணவர்கள் 2008 இல் முதன் முறையாக ஆங்கில மொழிமூலம் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றினர். 2003 இல் ஆங்கில மொழி மூலப் போதனை ஆரம்பிக்கப்பட்டபோது, இம் முயற்சி வெற்றியடையுமா எனப் பலரும் ஐயுற்றனர்.

தாய்மொழி மூலப் போதனை என்ற கொள்கைக்கு மாறான செயல் இதுவெனச் சிலர் கருத்து வெளி யிட்டனர். மேலும், மாணவர்களின் ஆங்கில அறிவு குறைவு, ஆங்கில மொழிமூலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் பற்றாக்குறைவு, ஆங்கில மொழி மூலம் கற்பித்தலில் முன்னனுபவமின்மை, சூழலின்மை மற்றும் ஆங்கில மொழிமூலப் போதனைக்குச் சாதகமான வீட்டுச் சூழலின்மை போன்ற பல காரணிகள் பலரின் ஐயப்பாட்டிற்கு வலுவூட்டின.

எனினும் அதிபரின் வழிநடத்தல், ஆசிரியர்களின் மீள்பயிற்சி, மாணவர்கள் மாற்றத்தை எதிர்கொண்ட திறன் ஆகியன ஐயப்பாட்டை நீக்கி சாதனை புரிய வழிகோலின.

இப் பரீட்சைக்குத் தோற்றிய 200 மாணவர்களும் சித்தி பெற்றி ருப்பதுடன், க.பொ.த.(உ/த) கற்கவும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் 199 பேர் க.பொ.த. (உ/த) விஞ்ஞானம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

**மாணவர்களின் பெறுபேறுகள்**
**A சித்தி அடிப்படையில்**

அட்டவணை I

| தரம் | தமிழ்மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 9A | 03 | 02 | 05 |
| 8A | 11 | 09 | 20 |
| 7A | 20 | 06 | 26 |
| 6A | 22 | 11 | 33 |
| 5A | 19 | 06 | 25 |
| 4A | 26 | 06 | 32 |
| 3A | 18 | 03 | 21 |
| 2A | 12 | 03 | 15 |
| 1A | 19 | 04 | 23 |
| | 150 | 50 | 200 |

5A யும் அதற்குக் கூடவும் A சித்திபெற்ற மாணவர்கள் 54.5 வீதமாகும். சகல மாணவர்களும் ஒரு A சித்தியாவது பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

200 மாணவர்கள் பரீட்சைக்கு தலா 9 பாடங்கள் எடுக்க வேண்டும். இதன்மூலம் 1800 பாட அலகுகளுக்கு தோற்றியிருக்க வேண்டும். உடல் நலக்குறைவால் ஒரு மாணவன் உடற்கல்விப் பரீட்சைக்கு தோற்றவில்லை. இதனால் கல்லூரியிலிருந்து பரீட்சைக்கு 1799 பாட அலகுகளுக்கு தோற்றியிருந் தனர்.

அட்டவணை II இல் பாட அலகுகளில் பெறுபேறுகள் தர அடிப்படையிலும் எண்ணிக்கையிலும் வீதத்திலும் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை II

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 954 | 53.03 |
| B | 406 | 22.57 |
| C | 303 | 16.84 |
| S | 109 | 6.06 |
| W | 27 | 1.50 |
| | 1799 | 100 |

இப் பெறுபேறுகளைத் தொகுத்து நோக்குகையில் மொத்த 1799 பாட அலகுகளில் 954 பாட அலகுகளில் மாணவர்கள் A சித்தி பெற்றிருக்கின்றார்கள். இது 53.03 விகிதமாகும்.

மாணவர்கள் சித்திபெறவில்லை. இது 1.50 விகிதமாகும். ஒட்டு மொத்தமாக பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 1772 பாட அலகுகளில் (98.5%) சித்தி பெற்றுள்ளனர்.

இந்துக் கல்லூரியில் சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய ஆறு கட்டாயப் பாடங்களுடன் மேலும் பதினொரு பாடங்கள் கற்பிக் கப்பட்டன. 2008 இல் 14 பாடங் களில் 100% சித்தி பெறப்பட் டுள்ளன. வணிகக்கல்வியில் 99%, ஆங்கில இலக்கியம் 97%, ஆங்கிலம் 88% சித்தியும் மாணவர் பெற்றிருப்பது மிகவும் பாராட் டிற்குரியது.

2008 பெறுபேற்றை 2007 ஆம் ஆண்டு பெறுபேற்றுடன் ஒப்பிடு கையில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி ஆகிய இரு பாடங்களில் பெறுபேறுகள் குறைவாக இருப்பதனைக் காண முடிகிறது.வினாத்தாள்கள் சற்றுக் கடினமாக இருந்ததென்றும் இதனால் மாணவர்களின் பெறுபேறு குறைவாக இருக் கின்றது எனக் கூறப்படுகின்றது. 2007 இல், 210 பேர் பரீட்சை எழுதி தமிழில் 180 பேர் A சித்தி பெற்றிருக்க 2008இல் 200பேர் பரீட்சை எழுதி 89 பேரே A சித்தி பெற்றிருப்பது குறிப் பிடத்தக்கது.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
Phd.Durham
முன்னாள் துணைவேந்தர்

வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு வரலாற்றுச் சாதனை யாகும். இதேபோல் தகவல் தொழில்நுட்ப பாடத்தை 139 மாணவர்கள் எடுத்து யாவரும் சித்திபெற்றிருப்பதுடன் 107 பேர் A,B சித்திபெற்றிருப்பதும் ஒரு பெரிய சாதனையாகும்.

ஒட்டுமொத்தமாக 2008 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் 2007 ஆம் ஆண்டு, 2006ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளிலும் பார்க்க முன்னேற்றம் கண்டுள்ளது.

அட்டவணை III இல் 2008 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகள் பாடரீதியாகக் காட்டப்பட்டுள்ளன. அட்டவணை IV இல் 2007, 2006 பரீட்சைப் பெறுபேறுகள் காட்டப்பட்டுள்ளன.

இம் மூன்று ஆண்டுகள் பரீட்சைப் பெறுபேறுகளை ஒப்பிட்டு நோக்குமிடத்து கல்லூரியின் பெறுபேறுகள் முன்னோக்கிப் போவதை அவதானிக்க முடியும்.

அட்டவணை III

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி க.பொ.த (சா/த) பரீட்சை -2008

| பாடங்கள் | தோற்றிய மாணவர்கள் | A | B | C | S | W | சித்தியடைந்த மாணவர்கள் | நூற்று வீதம்% |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 197 | 193 | 04 | - | - | - | 197 | 100% |
| கத்தோலிக்க சமயம் | 03 | 03 | - | - | - | - | 03 | 100% |
| தமிழ்மொழி | 200 | 89 | 79 | 30 | 02 | - | 200 | 100% |
| ஆங்கிலம் | 200 | 59 | 30 | 37 | 50 | 24 | 176 | 88% |
| விஞ்ஞானம் | 200 | 86 | 49 | 55 | 10 | - | 200 | 100% |
| கணிதம் | 200 | 143 | 33 | 19 | 05 | - | 200 | 100% |
| வரலாறு | 200 | 138 | 40 | 18 | 04 | - | 200 | 100% |
| ***1ம் பாடத் தொகுதி*** | | | | | | | | |
| வணிகக் கல்வி | 106 | 32 | 38 | 27 | 08 | 01 | 105 | 99% |
| புவியியல் | 68 | 27 | 21 | 19 | 01 | - | 68 | 100% |
| குடியுரிமைக் கல்வி | 26 | 17 | 08 | 01 | - | - | 26 | 100% |
| ***2ஆம் பாடத்தொகுதி*** | | | | | | | | |
| சங்கீதம் | 06 | 02 | - | 04 | - | - | 06 | 100% |
| சித்திரம் | 11 | 02 | 02 | 07 | - | - | 11 | 100% |
| தமிழ்இலக்கியம் | 106 | 68 | 16 | 16 | 06 | - | 106 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 11 | 01 | 09 | 01 | - | - | 11 | 100% |
| ஆங்கிலஇலக்கியம் | 66 | 03 | 08 | 35 | 18 | 02 | 64 | 97% |
| ***3ஆம் பாடத்தொகுதி*** | | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | 139 | 52 | 57 | 25 | 05 | - | 139 | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 55 | 38 | 11 | 06 | - | - | 55 | 100% |
| ஆக்கத்திறன் தொழில்நுட்பவியில் | 05 | 01 | 01 | 03 | - | - | 05 | 100% |
| சுகாதாரமும் உடற்கல்விக்கு ஒரு மாணவன் பரீட்சைக்கு தோற்றவில்லை | | | | | | | | |

எமது நாட்டில் இங்கிலாந்தில் இருப்பது போல் A* தரம் இங்கு கொடுப் பதில்லை. A* தரம் அறிமுகமானால் மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை அடையாளம் காண முடியும். 27 பாட அலகுகளில் மாத்திரமே

ஆங்கிலத்தில் கடந்த வருடம் 9 பேரே சித்தி பெறவில்லை. ஆனால் இவ்வருடம் இவ்வெண்ணிக்கை 24 பேராக அதிகரித்துள்ளது. முதல் முறையாக இந்துக் கல்லூரியின் அண்மைக்கால வரலாற்றில் கணிதத்தில் 100 விகித சித்தி பெறப்பட்டுள்ளது. இக் கல்லூரி மிகவும் சிறந்த கணித பாரம்பரியத்தைக் கொண்டு இருந்த பொழுது கணிதத்தில் 100 விகித சித்தியை முன்னர் பெற்றிருக்க

2008 ஆம் ஆண்டு மாணவர்களின் விருப்புப் பாடத் தெரிவு 2006, 2007 ஆம் ஆண்டு இருந்த பண்பிலும் பெரிதும் வேறுபட்டுள்ளது. 2008 இல் சித்திரம், சங்கீதம், தமிழ் இலக்கியம்,சுகாதாரமும் உடற்கல்வியும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. மறுபக்கத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல், ஆங்கில இலக்கியம், புவியியல் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

(தொடரும்)

## திரை விமர்சனம்



# அயன்

கடத்தல் காரன் மனம்மாறி அத்தொழில் நடத்தும் கும்பலை பொலிஸில் சிக்க வைக்கும் கதை.... புதுப் படத்திருட்டு சீடி தயாரித்தல், வைரம் கடத்துதல் என சமூக விரேத காரியங்களில் ஈடுபடும் பிரபுவுக்கு விசுவாசமிக்க ஊழியர் சூர்யா. பொலிஸை ஏமாற்றி உள்ளூர் ,வெளியூர்களில் இருந்து பொருட்களை சுருட்டி வருவதில் கில்லாடி.

இவர்களுக்கு போட்டியாக முளைக்கின்றான் கமலேஷ். பிரபு கோஷ்டியை வீழ்த்தி கடத்தலில் நம்பர்வன் ஆக பலவழிகளில் முயற்சிக்கிறான். பிரபுவுக்கு சொந்தமான வைரக் கற்களை ஆள் வைத்துக் கடத்துகிறான்.

சூர்யா புகுந்து சதிகளை தவுடு பொடியாக்குகிறார். நண்பன் வயிற்றில் போதை மருந்து வைத்து மலேசியாவுக்கு கடத்துகிறான் வில்லன். அவன் அங்கு வயிற்றில் பொட்டலத்துடன் உயிருக்குப் போராடுகிறான். அவனை சூர்யா காப்பாற்ற முயற்சிக்கிறார். ஆனால் வில்லன் கோஷ்டி வயிற்றை கிழித்துபோதை மருந்தை எடுக்கிறது. நண்பன் சாகிறான். கொலைப்பழிசூர்யாமீதுவிழுகிறது. அதிலிருந்து தப்புவதும் கடத்தல் கும்ப லை அழிப்பதும் கிளைமாக்ஸ்.

துறுதுறுவென வருகிறார் சூர்யா. விமான அதிகாரியை ஏமாற்றி வெளிநாட்டில் இருந்து புதுப்பட சி.டி.யை திருடி வரும் ஆரம்பமே அமர்க்களம்...கொங்கோ நாட்டில் இருந்து வைரத்தை கடத்து வது... அதைப் பறித்துக் கொண்டு ஓடும் ரௌடிகளை வீட்டு மாடிக ளில் விரட்டி முட்டி மோதுவது ஹொலிவுட் மிரட்டல்...



விமான நிலையத்தில் அதிகாரிகள் சுற்றி வளைக்க குழந்தை சட்டையின் பின் பகுதியில் திணித்து வெளியே கொண்டு வருவது பர பர... சி.பி.ஐ அதிகாரி யிடம் மாட்டிக்கொள்ளாமல் தங்கக் கட்டிகளை சரக்கு ரயிலில் ஏற்றி அனுப்பி அதிகாரியின் முகத்தில் கரி பூசுவது நச்..நண்பன் குடும்பத்தினர் எனத் தப்பாக நினைத்து விலை மாது வீட்டுக்குள் புகுந்து படும் அவஸ்தைகள்..மறுநாள் நிஜமாகவே நண்பன் வீட்டுக்குப்போய் அங்கு இருப்பவர்களை விலை மாதர்கள் என நினைத்து வாங்கி கட்டுவது கலகலப்பு... மலேசியா கார் சேசிங்... கொங்கோ மலை உச்சியில் வில்லனோடு மோதும் சண்டை மயிர் கூச்செரியச் செய்கின்றன. பிரபு கடத்தல் ஜாம்புவானாக அமைதியாக மிரளவைக்கிறார். முடிவு பரிதாபம். தமன்னா அழகான காதலியாய் பளிச்சிடுகிறார். காதலனை கொலைகாரன் என பொலிஸில் மாட்டிவிடுவது திருப்பம். சூர்யாவின் நண்பனாக வரும் ஜெகன் மலேசியாவில் வயிற்றைக் கீறி சாகடிக்கப்பட்டு பரிதாபப்பட வைக்கிறார். கருணாஸ் காமெடியிலும் குணச்சித்திரத்திலும் சபாஷ் போட வைக்கிறார். ஆகாஷ் தீப் மிரட்டல் வில்லனாகவும் பொன்வண்ணன் சுங்க அதிகாரியாகவும் வருகிறார்கள்.காட்சிகளின் பிரமாண்டம் கதையிலும் இருந்திருந்தால் இன்னும் பளிச்சிட்டிருக்கும். ஹரிஸ் ஜெயராஜ் இசையில் பாடல்கள் இனிமை. எம்.எஸ்.பிரபுவின் கமெரா நாடு நகரெல்லாம் ஊடுருவிப் பிரமிக்க வைக்கிறது. கனல் கண்ணனின் சண்டைப் பயிற்சியில் அனல்...

கடத்தல் கதையை விறுவிறுப்பாக படமாக்கி சிறந்த இயக்குநர் பட்டியலில் நுழைந்துள்ளார் கே.வி.ஆனந்த்.

# கமல் நடிக்கும் 'உன்னைப்போல் ஒருவன்'



தசாவதாரத்துக்குபின் கமலின் அடுத்த படம் என்ன என்ற எதிர் பார்ப்பு ஏற்பட்டது. ''மர்ம யோகி''யில் நடிப்பார் என பேசப் பட்டது. ''மருதநாயகம்'' பெயரும் அடிபட்டது.ஆனால் இரண்டும் ரூ.100 கோடிக்கு மேல் செலவிட வேண்டிய மெகா பட்ஜெட் படங் கள் என்பதால் அவற்றைத் தள்ளி வைத்தார்.

அதற்குப் பதிலாக ''தலை வன் இருக்கின்றான்'' என்ற படத்தில் நடிக்கப்போவதாக அறி விக்கப்பட்டது. இது 'ஏ வெட் னஸ்டே'' என்ற இந்தி படத்தின் ''ரீமேக்''ஆகும். மோகன்லாலும் இதில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். படவேலைகள் விறுவிறுப்பாக நடக்கின்றன.இந்த நிலையில் இதன் தலைப்பை ''உன்னைப்போல் ஒருவன்' என மாற்றியுள்ளார் கமல். ''தலைவன் இருக்கின்றான்'' பெயர் நீக்கப்பட்டு விட்டது.''உன்னைப் போல் ஒருவன்'' என்ற பெயரில் பட டிரைலர் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

லேசான தாடியுடன் கண்ணாடி அணிந்து கமல் காட்சியளிக்கிறார். இப்படத்துக்கு கமலின் மகள் ஸ்ருதி இசையமைக்கிறார்.சாக்ரி இயக்குகிறார்.

# சிங்கள மொழியில் அருந்ததீ ரீமேக்




தெலுங்கில் சக்கை போடு போட்டு விட்டு தமிழிலும் மெகா ஹிட் ஆன திரைப்படம் அருந்ததீ. இது தற் போது சிங்கள மொ ழியில் ரீ மேக் செய் யப்பட்டு வருகிறது.

இரண்டு படத் துக்குப் பிறகு தமிழ் பட இயக்குநர்க ளால் புறக்கணிக் கப்பட்ட அனுஷ்கா தான் இந்தப் படத்தின் பொம்மாயி என்ற கேரக்டரில் கலக்கியிருந்தார்.


நேரடிப் படங்களையும் மிஞ்சி வசூலில் சாதனை படைத்திருக்கும் இந்தப் படத்தை தற்போது சிங்கள மொழியில் டப்பிங் செய்யும் பணிகள் மின்னல் வேகத்தில் நடந்துவருகிறது. விரைவில் அருந்ததீ சிங்கள மொழி பேசவிருக்கிறது.

# விஜயகாந்தின் மரியாதைக்கு சிக்கல்?



விஜய்காந்த் நடித்த எங்கள் ஆசான் படம் சிக்கலில் சிக்கித் தவித்து ரிலீஸ் ஆக முடியாமல் இருக்கிறது. தற்போது அவர் நடித்த மரியாதை படத்துக்கும் சிக்கல் ஏற்பட்டிருப்பதாக கொலிவுட்டில் கிசுகிக்கிறார்கள். வானத்தை போல படத்துக்கு பிறகு விக்ரமன் -விஜயகாந்த் இணையும் படம் மரியாதை. விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடித்திருக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக மீனாவும் மீரா ஜாஸ்மீனும் நடித்திருக்கிறார்கள். படத்தில் அனல் தெறிக்கும் அரசியல் வசனங்கள் இருப்பதாக தகவல்கள் கசிந்துள்ள நிலையில் தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சி தலைவரின் படம் வெளி யாகலாமா? என்ற சர்ச்சை கிளம்பியிருக்கிறதாம். தேர்தலில் போட்டியிடும் ஒரு கட்சியின் தலைவர் நடித்த படத்தை தேர்தல் சமயத்தில் வெளியிடக் கூடாது என்றும் அது தேர்தல் சட்டத்துக்கு புறம்பா னது என்றும் தேர்தல் ஆணையகத்துக்கு புகார்கள் சென்றிருப்பதாக கோலிவுட்டில் கிசுகிசுக்கிறார்கள்.

# எந்திரன் ரகசியங்களை திறக்கும் ஷங்கர்!



தமிழ் சினிமா ரசிகர்கள் பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் படம் ரஜினியின் நடிப்பில் ஷங்கர் உருவாக்கும், எந்திரன்-தி ரோபோ'' பாதிப் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. கிட்டத்தட்ட ரூ.200 கோடி செலவில் சன் பிக்சர்ஸ் மிகப் பிரமாண்டமாக உருவாக்கி வரும் இந்தத் திரைப்படம் குறித்து சங்கர் அளித் துள்ள பேட்டியில்,

எந்திரன் என்னுடைய, ரஜினியின் கனவுப் படம் என்பது உண்மையே. இந்தப் படத்தில் அனிமேட்ரானிக்ஸ் எனும் புதிய உத்தியைப் புகுத்தியுள்ளேன். ஹாலிவுட் படங் களில் இப்போது அறிமுகமாகியுள்ள உத்தி. இதற்கு முந்தைய படங்களில் அனிமேஷன் முறையில் படங்களை வரைந்து கிராபிக்ஸ் செய்தார்கள். இப்போது எலக்ரோனிக்ஸ் மற்றும் ரோபோடிக்ஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொம் மைகளுக்கு உயிர் கொடுத்து உலவ விட்டிருக்கிறோம்.

எந்திரனில் மிக அற்புதமான,விஞ்ஞான அடிப்படையிலான செட்களை உருவாக்கியுள்ளோம். ஒவ்வொரு பாடலும் அட்டகாசமாக எழுதப்பட்டு, அருமையாக மெட்டமைக்கப்பட்டுள்ளன....


சிவாஜிக்குப் பிறகு மீண்டும் ரஜினியுடன் பணியாற்றுவது மகிழ்ச்சியான ஒரு அனுபவம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவருடன் பணியாற்றத் தொடங்கிய பின்புதான் அவர் எத்தனை பவர்ஃபுல் மனிதர், எத்தனை எளிமையானவர், பணிவானவர் என்பதைப் புரிந்துகொண்டேன். அவருடன் பணியாற்றுபவர்களுக்கும் அவரது இந்தப் பணிவு வரும் என்பதே உண்மை.

எந்திரனில் தனி காமெடி ட்ராக் கிடையாது. கதையிலேயே தேவையான நகைச்சுவை உள்ளது. கருணாஸூம் சந்தானமும் தான் காமெடி பகுதியை செய்கிறார்கள். சிவாஜியில் இடம்பெற்ற ஸ்டைல் பாடலை விட பலமடங்கு புதுமையான பாடல் ஒன்று இந்தப் பட்த்திலும் இருக்கு. ரஜினி பிரமிக்க வச்சிருக்கார். அந்தப் பாடலுக்கும் நடனம் அமைத்த பிரபுதேவாவே, நான் இதுவரை இப்படி ஒரு கடினமான மூவ்மெண்டை அமைத்ததில்லை என்றார்.

அந்த அளவுக்கு வித்தியாசமான ரஜினியையும், அவரது ஸ்டைல் நடத்தையும் பார்க்கப் போகிறீர்கள்என்றார் ஷங்கர்.

# உறுதியான பிரதமராக இருப்பதற்கு உரத்து பேசவேண்டிய அவசியமில்லை

## மன்மோகன்சிங் அத்வானி மீது கடும் தாக்கு



(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன்சிங் டெல்லியில் நேற்று முன்தினம் பெண் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பாரதீய ஜனதா மூத்த தலைவரும், அக்கட்சியின் பிரதமர் பதவிக்கான வேட்பாளருமான அத்வானியை அவர் கடுமையாக தாக்கினார்.

அவர் கூறுகையில்,

மத்தியில் மீண்டும் வலுவான ஆட்சி அமைய வேண்டும். காங்கிரஸ் கட்சியால் தான் சிறந்த உறுதியான அரசை வழங்க முடியும். என்னை பலவீனமான பிரதமர் என்று அத்வானி கூறுகிறார். உறுதியான, வலுவான பிரதமராக இருக்க உரத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. பொதுக்கூட்டங்களில் அத்வானியைப் போல் என்னால் பேச முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் நமக்கு உறுதியான செயல்பாட்டுடன் கூடிய பிரதமர்தான் வேண்டும். அத்வானி வலிமையான தலைவர் என்றால் பாபர் மசூதி இடிக்கப்பட்டதையும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களையும் அவர் தடுத்து நிறுத்தி இருக்க வேண்டும்.


பாரதீய ஜனதாஆட்சியின்போது இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஆப்கானிஸ்தானில் உள்ள கந்தகாருக்கு கடத்தப்பட்ட போது, அங்கு இருந்த தலிபான் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வெளியுறவு மந்திரியை பாரதீய ஜனதா அரசு அனுப்பி வைத்தது. அதுமட்டும் அல்லாமல் சிறையில் இருந்த 3 தீவிரவாதிகளை விடுவித்தது.

ஆனால் மும்பையில் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய போது நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வெளியுறவு மந்திரியை நாங்கள் அனுப்பி வைக்கவில்லை. கமாண்டோ வீரர்களை அனுப்பி 9 தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றோம்.

மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பவர்களால் பொருளாதார சிக்கல், தீவிரவாதம், வறுமை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது. அத்வானி உள்துறை மந்திரியாக இருந்த போது நாட்டின் பாதுகாப்பு நிலைமை எப்படி இருந்தது? தற்போது எப்படி உள்ளது? என்பதையும் மக்கள் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

குஜராத் முதல்–மந்திரி நரேந்திர மோடியை சிறந்த முதல் – மந்திரி என்று அத்வானி கூறுகிறார். அந்த மாநிலத்தில் நடந்த கலவரத்தில் தான் ஆயிரத்து 180 பேர் கொல்லப்பட்டனர்.

யாருக்கு எதிராகவும் நான் அநாகரிகமான வார்த்தைகளை பயன்படுத்துவது கிடையாது. நான் வளர்ந்த சூழ்நிலை. எனது குடும்ப பின்னணி அப்படிப்பட்டது. கடுமையான வார்த்தைகளை பயன்படுத்துவதால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.



அத்வானியை பிரதமர் பதவிக்கு உரிய வேட்பாளராக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாதது பற்றி அத்வானி குறை கூறுகிறார். சமீபத்தில் நான் இருதய ஆபரேஷன் செய்து கொண்டிருப்பதால் உடம்பை வருத்திக் கொள்ளக்கூடாது என்பதற்காக தேர்தலில் போட்டியிடவில்லை.

மேல் – சபை உறுப்பினராக இருந்த இந்திரா காந்தி தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால் ஆகியோர் பிரதமர் பதவியை வகித்து உள்ளனர் என்று மன்மோகன்சிங் தெரிவித்தார். (ஓ–6)

# இலங்கையில் போரை நிறுத்த வேண்டும்

## முன்னாள் நீதிபதி வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும் என முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணா ஐயர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நடைபெறுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இந்த செயல்களால் அங்கு ஏராளமான அப்பாவி தமிழ் மக்கள் உயிர் பலியாகிறார்கள். சொத்து சேதங்களும் ஏற்படுகிறது. கூட்டாச்சிஒன்று தான்அங்கு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தும்.

இலங்கை அரசுக்கு சொல்வது என்னவென்றால் இராணுவத் தாக்குதலால் ஒரு அரசு நீடிக்கும் என்று கூற முடியாது. ரோம், கிரேக்கம், லண்டன் போன்ற பேரரசுகள் வீழ்ந்த சரித்திரங்கள் உண்டு. ஆகவே இராணுவ தாக்குதலை இலங்கை அரசு நிறுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஓ–6)

# இலங்கைக்கு வழங்கிய ஆயுதங்களை திரும்பப் பெறக் கோரி மனுத்தாக்கல்

## சோனியா, மன்மோகன்சிங் பிரதிவாதிகள்

(சென்னை)

இலங்கைக்கு இந்திய அரசு வழங்கியுள்ள ஆயுதங்களைத் திரும்ப பெற வேண்டுமெனக்கோரி சென்னை உயர் நீதிமன்றில் பொது நல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பிரதிவாதிகளாக காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் சில அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. ஏற்கனவே இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வன்னியில் இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த படையினர் பெங்களூருக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டிருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ–6)

# விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்க இந்தியாவின் விசேட செய்மதி

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்கும் நோக்கில் இந்தியா விசேட செய்மதியொன்றை ஏவவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக இந்தியா செய்மதியொன்றை நிறுவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் நாட்டை மையப்படுத்தி இந்த செய்மதி இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதி குறித்த செய்மதி விண்ணுக்கு ஏவப்பட உள்ளதாகவும் இதன் மூலம் விடுதலைப்புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக முதல் தடவையாக இந்தியா செய்மதி யொன்றை ஏவவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ–6)

# இலங்கைத் தமிழர்களுக்காக ஆட்சியை கேடயமாக பயன்படுத்த முதல்வர் முன்வராதது ஏன்?

## இராமதாஸ் கேள்வி

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க ஆட்சியைக் கேடயமாகப் பயன்படுத்த முதல்வர் கருணாநிதி முன்வராதது ஏன் என்று பாமக நிறுவுனர் இராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திமுகவுக்கு உள்ள ஆட்சி அதிகாரத்தை வைத்தும், மத்திய ஆட்சியில் பங்கேற்றியிருக்கும் நிலையைப் பயன்படுத்தியும் இலங்கை இனப் படுகொலைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

தேசிய முன்னணி, ஐக்கிய முன்னணி, தேசிய ஜனநாயகக் கூட்டணி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி என அனைத்து கூட்டணி ஆட்சியிலும் திமுக இடம்பெற்று வந்துள்ளது. இப்போதும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்திட வழியின்றி பார்த்துக் கொண்டிருக்கும் நிலைதான் தொடர்கிறது. ஆட்சியை வைத்து எதுவும் செய்ய முடியாத நிலையில் தமிழினத்தின் வாழ்வுக்காக சுயமரியாதைக்காக, இனமானத்திற்காக ஆட்சியைக் கேடயமாக ஏன் முன்னிறுத்தக் கூடாது?

35 ஆண்டுகளுக்கு முன்பு ஈ.வெ.ரா. பெரியார் கூறியதைப் போல இன்றைக்கும் அடிமையாகத்தான் இருக்கிறோம் என்று முதல்வர் கூறியிருப் பது




அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது.

இலங்கை அதிபர் ராஜபக்ஷவுக்கு மாவீரன் அலெக்சாண்டரைப் போல பெருந்தன்மை இருக்க வேண்டும் எனக் கூறியிருப்பது உலக அரங்கில் தமிழர்களைத் தலைகுனிய வைத்து விட்டது.

இலங்கையில் நடைபெறும் போரை தடுத்து நிறுத்துங்கள் என்று வலியுறுத்தி வாதிடுவதை விட்டுவிட்டு போருக்கு முடிவுரை எழுத முற்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

போரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தான் காங்கிரஸுடன் தேர்தல் கூட்டு என அறிவித்து அவ்விதம் செயல்படாவிட்டால் கூட்டணியை தூக்கி எறியலாமே? காங்கிரஸை செயல்பட வைக்கும் விசை முதல்வரிடம் தான் உள்ளது. அதை ஏன் பயன்படுத்தவில்லை என்பதுதான் தெரியவில்லை. இது போன்று மக்கள் மத்தியில் வாழும் கேள்விகளை இனி முதல்வரே முயன்றாலும் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார் இராமதாஸ். (ஓ–6)

# விழிநீர் அஞ்சலிகள்



## திருமதி.சி. சிவகுணநாயகி

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக
இருந்து எம்மை வழி நடத்தும் எம்
மதிப்பிற்குரிய தலைவர் திரு.சி.சிவதாசன்
அவர்களின் பாசமிகு பாரியார்
திருமதி .சி.சிவகுணநாயகி அவர்கள்
சிவபதம் அடைந்த செய்தியறிந்து
மிகுந்த வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால் துயருறும்
தலைவர் அவர்களுக்கும் உற்றார்
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
கவலைகளையும் அனுதாபங்களையும்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

பணியாளர்கள்
பனைஅபிவிருத்திச் சபை

கண்டி வீதி
யாழ்ப்பாணம்

சி.2298

# நெதர்லாந்தில் உண்ணாவிரதமிருந்த தமிழர்கள் கைது;
# தமிழ் மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

(நெதர்லாந்து)

இலங்கையில் உடனடியாக போரை நிறுத்தக் கோரி நேற்று முன்தினம் ஐந்தாவது நாளாக நெதர்லாந்து நாடாளுமன்ற முன்றலில் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்களால் தொடர் போராட்டம் நடத்தப்பட்டது.

இதுவரை போர் நிறுத்தப்படாமல் இலங்கை அரசானது தொடர்ந்தும் வன்னியில் தமிழ்மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியதில் 300ற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதை அறிந்து நேற்று மாலையில் இருந்து 3 தாய்மார்கள் 2 ஆண்கள் என 5 பொதுமக்கள் சாகும் வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இதற்கு பொலிஸார் அனுமதி மறுத்திருந்தனர். உண்ணாவிரதம் இருந்தவர்களையும் அவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தினை நடத்தியவர்களையும் கலைந்து போகுமாறும் இல்லையேல் கைது செய்வோம் எனவும் பொலிஸார் எச்சரித்திருந்தனர்.

இருந்தும் அவர்கள் தமது உறவுகள் பல்லாயிரக்கணக்கில் படுகொலை செய்யப்படுகின்ற பொழுது இதனை உடன் தடுத்து நிறுத்தும் வரை போராட்டம் தொடரும் என பொலிஸாருக்கு அறிவித்து போராட்டத்தில் உறுதியாக இருந்தனர்.

இதன் பின்னர் அனைவரையும் சுற்றிவளைத்து பொலிஸார் கைது செய்த பொழுது அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் இக் கைதை எதிர்த்து கோசங்களை எழுப்பிய பொழுது அம்மாணவர்களை பொலிஸார் தாக்கி கைதுசெய்துகொண்டு சென்றுள்ளனர். 30 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

மனித உரிமைகளை வெறும் வார்த்தைகளில் பேசும் ஐரோப்பிய நாடுகள் வன்னியில் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும் வரை நாட்களைக் கடத்தி அதன்பின்பு ஏதோ தாங்களும் தமிழர்களைக் காப்பாற்ற வருகின்ற ஜனநாயக நாடுகள் போல் பாசாங்கு செய்து தங்கள் நலன்களை கவனித்து கொள்ளப் போவது தான் உண்மை எனவும் இவர்களிற்கு தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதில் அக்கறை இல்லை எனவும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். (ஓ-6)

## இலங்கை- பெல்ஜியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

கப்பல் சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக இலங்கைக்கும் பெல்ஜியத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ சமாப்பித்திருந்தார்.

இதன்மூலம் பெல்ஜியத்தில் கப்பல் பணியாளர்களாக வேலை செய்வதற்கு இலங்கையர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

# லண்டனில் ஜவஹர்லால் நேருவின் சிலை தமிழர்களால் உடைக்கப்படவில்லை

## தூதரகம் அறிவிப்பு

(லண்டன்)

லண்டன் இந்தியத் தூதரகத்தின் வெளியே வைக்கப்பட்டுள்ள ஜவஹர்லால் நேருவின் சிலையின் தலை இலங்கைத் தமிழர்களால் உடைக்கப்பட்டதாக வந்த செய்திகளை தூதரகம் மறுத்துள்ளது.

சிலை தானாகவே விழுந்து உடைந்ததாக தூதரகம் விளக்கம் அளித்துள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி லண்டனில் 4 நாட்களாக இலங்கைத் தமிழர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். இந்நிலையில் இந்தியா ஹவுசில் வைக்கப்பட்டிருந்த நேரு சிலையின் தலை உடைந்திருந்தது. இதை புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள் தான் உடைத்ததாகவும் அங்கிருந்த குளோஸ் சர்க்யூட் கமராவை திருப்பி வைத்து விட்டு இந்தச் செயலை அவர்கள் செய்துள்ளதாகவும் இந்திய செய்தி நிறுவனங்கள் குற்றம் சாட்டினர். ஆனால் சிலையை யாரும் உடைக்க வில்லை என்றும் அது தானாவே சரிந்து உடைந்து விட்டதாகவும் தூதரகத்தின் செய்தி தொடர்பாளர் சுபாஷினி விளக்கம் அளித் துள்ளார்.

சிலையின் மார்புப்பகுதி அதன் அடித் தளப்பகுதியில் இருந்து சரிந்து விட்டது. இதில் யார் மீதும் எங்களுக்கு சந்தேகம் இல்லை. இதை யாராவது உடைத்ததாக யாரிடமாவது ஆதாரம் இருந்தால் அதை எங்களிடம் தரலாம் என்றார்.

ஆனாலும்.இது குறித்து லண்டன் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். தூதரகம் அமைந்துள்ள இந்தியா ஹவுசின் விசா அலுவலகம் முன் 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சிலை நிறுவப்பட்டது. (ஓ-6)

# தீவிரவாதத்தை ஒடுக்க ரூ. 4 இலட்சம் கோடி
# பாராளுமன்றத்திடம் ஒபாமா அனுமதி கேட்கிறார்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அமெரிக்க பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு எழுதியுள்ள கடிதத்தில் ,

ஈராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் தீவிரவாதம் தலை தூக்கியிருப்பதை அடுத்து அங்கு நாம் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது.

ஆப்கான்- பாகிஸ்தான் எல்லை தீவிரவாதிகளின் சொர்க்கபூமியாக திகழ்கிறது. இந்த இரண்டு நாடுகளிலும் இருந்து கொண்டு அமெரிக்காவுக்கு சவாலாகவுள்ள அல்கொய்தா- தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்கவேண்டும். எனவே அமெரிக்கப்படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஒதுக்கினால் மட்டுமே அல்கொய்தா இயக்கத்தை தோற்கடிக்கமுடியும்.

எனவே இதற்காக 83.4 மில்லியன் அமெரிக்க டொலரை (இந்திய பணம் மதிப்பில் 4 இலட்சத்து 17ஆயிரம் கோடி ரூபாய்) பாராளுமன்றம் அனுமதிக்குமாறு வேண்டுகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பிஜியில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தீர்ப்புக் கூறிய நீதிபதிகள் பதவி நீக்கம்

பிஜி தீவில் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் தீர்ப்பு கூறிய மூன்று நீதிபதிகள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 2014 ஆம் ஆண்டில் தேர்தல் நடத்த அந்நாட்டு அதிபர் ஒப்புக் கொண்டுள்ளார்.

பிஜி தீவில் அடிக்கடி இராணுவப் புரட்சி மூலம் ஆட்சிகள் கவிழ்க்கப்படுவது வழக்கம் ஒரு முறை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர சவுத்ரியின் ஆட்சி கவிழ்க்கப் பட்டது. 2006ஆம் ஆண்டு பிரதமராக இருந்த லெய்செனியா குரேசின் ஆட்சியை இராணுவப் புரட்சி மூலம் கவிழ்த்தார் இராணுவத் தளபதி பைனிமராமா.

இவரை பிரதமராக நிய மித்தார் பிஜி அதிபர் இலாய்லோ. இதையடுத்து பிஜி நாடு காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டது.

அந்நாட்டின் மீது அமெரிக்க, ஐரோப்பா அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடையை அமுல்படுத்தின பதவியிழந்த முன்னாள் பிரதமர் குரேஸ் அந்நாட்டு நீதிமன்றில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டும்படி கோரி வழக்கு தொடர்ந்தார். மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்தது. 2006ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தது செல்லாது தேர்தல் மூலம் ஜனநாயக ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும் என நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் ஜனநாயக நடைமுறையை அமுல்படுத்தும் படி வற்புறுத்தியுள்ளார். சர்வதேச நாடுகளின் நெருக்கடியைத் தொடர்ந்து இடைக்கால ஜனநாயக அரசை அமைக்க ஏற்பாடு செய்வதாக அந்நாட்டு அதிபர் இலாய்லோ தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு ஜனநாயக நடைமுறைப்படி தேர்தல் நடத்தவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இராணுவ ஆட்சி நடத்தி வந்த பைனிமராமாவும் அதிபர் இல்ாய்லோவும் நண்பார்கள் இராணுவ ஆட்சிக்கு எதிராக தீர்ப்பு கூறிய மூன்று நீதிபதிகளை இலாய்லோ பதவி நீக்கம் செய்துள்ளார். நியாயப்படி இந்த ஆண்டு தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால் 2014ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப் போவதாக இலாய்லோ அறிவித்துள்ளார். (ஓ-6)

# மலேசியாவின் புதிய மந்திரி சபை மன்னர் முன்னிலையில் பதவியேற்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் புதிய பிரதமராக கடந்த மூன்றாம் திகதி நஜீப் ரசாக் பதவி ஏற்றுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து 28 புதிய மந்திரிகளை அவர் நேற்று முன்தினம் நியமித்தார். இவர்களும் துணை மந்திரிகள் 40 பேரும் நேற்று முன்தினம் பதவியேற்றனர்.

மலேசிய மன்னர் சுல்தான் மிஷான் ஷைனல் அப்தின் முன்னிலையில் மந்திரிகள் அனைவரும் பதவி ஏற்பு உறுதி மொழிஎடுத்துக்கொண்டனர்.

இந்திய வம்சாவழியைச்சேர்ந்தவரும் மலேசியன் இந்தியன் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினருமான எஸ்.சுப்பிரமணியன் மனித வளத்துறை மந்திரியாக பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் முன்னாள் பிரதமர் அப்துல்லா படாவியின் மந்திரி சபையிலும் இதே பதவியை வகித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நிதித்துறையை தன் வசம் வைத்துக் கொண்ட பிரதமர் நஜீப் இரண்டாவது நிதி மந்திரியாக அகமது ஹஸ்னி ஹனாட்ஸ்லா என்பவரை நியமித்துக்கொண்டார். (ஓ-6)

# ஜனநாயக நாட்டில் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் தடுக்க முடியாது

## இலங்கையின் கோரிக்கைக்கு கனேடிய அரசு அறிவிப்பு

(கனடா)

ஜனநாயக நாடு என்ற ரீதியில் சட்ட ரீதியாக நடைபெற்று வரும் எந்தவொரு போராட்டமோ அல்லது ஆர்ப்பாட்டமோ தடை செய்யப்படமாட்டாதென கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கனேடிய தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதாகவும் அதனை உடனடியாக தடுத்து நிறுத்த அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை கோரிக்கை விடுத்திருந்தது.

ஓட்டோவாவில் அண்மையில் இலங்கைத் தமிழர்களினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கைத் தூதுவர் தயா பெரேரா கோரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்று வரும் யுத்தத்தை தடுத்து நிறுத்தி பொது மக்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டுமென கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கெனொனும் இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு விசேட பிரதிநிதியொருவரை நியமிக்க வேண்டுமென கனேடிய லிபரல் கட்சித் தலைவர் மைக்கல் இக்னடியும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 02 05 1942

இறப்பு 13 03 2009

அமரர்

திருமதி மங்கையற்கரசி கனகலிங்கம்

இன்று நடக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளவும்.

பிள்ளைகள்

சுப்பர்மடம்
பருத்தித்துறை.


(C/2297)

Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs



# வன்னிக்கான உணவு விநியோகமும் வவுனியாவில் கல்வி நடவடிக்கைகளும்

வன்னியிலிருந்து வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திற்கு 62 ஆயிரத்து 212 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். வவுனியாவில் 15 முகாம்களிலும் யாழ்ப்பாணத்தில் ஆறு முகாம்களிலும் இடம் பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் வன்னியிலிருந்து கடல் மார்க்கமாக மேலும் ஒரு தொகுதி நோயாளர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைத்துவரப்படும்நோயாளர்களது எதிர்பார்ப்புகள் குறித்து அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வைத்திய அதிகாரியான குணாளன் தெரிவிக்கையில், வன்னியிலிருந்து வருகின்ற நோயாளர்கள் அமைதியானதொரு சூழலை எதிர்பார்க்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் துப்பாக்கி சத்தங்களுக்கு மத்தியில் சிக்குண்டு அங்கிருந்து வருகின்றார்கள்.

இரண்டாவதாக அவர்களுக்கு ஆதரவாக இருந்து நாங்கள் உதவிகளை வழங்க வேண்டும் என்று எம்மிடம் எதிர்பார்க்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வன்னியில் விட்டு வந்த தமது உறவினர்களை எண்ணி அவர்கள் மிகுந்த கவலையுடன் இருக்கின்றார்கள் என்றார்.

வன்னியிலிருந்து வரும் நோயாளிகள் மற்றும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் தொடர்பில் வைத்திய கலாநிதி குணாளன். மேலும் தெரிவிக்கையில், நோயாளர்கள் திருகோணமலையிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் உலக தரிசனம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக அவர்களுக்கு உடனடியாக உணவு வழங்குகின்றோம். அதே உணவைத் தான் நாங்களும் அங்கு செல்கின்ற போது உண்ணுகின்றோம். நல்ல உணவு வழங்கப்படுகிறது.

கடந்த முறை நான் அங்கு சென்றிருந்த போது நூடில்சும் முட்டையும் கொடுத்திருந்தார்கள். இந்தமுறை பிட்டும் கோழிக் கறியும் கொடுத்தார்கள். மிகவும் கஷ்டப் பட்டு வருகின்ற மக்களுக்கு உணவு மிகவும் முக்கியமானது. அவர்களுக்கு நல்ல உணவு கொடுக்கப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் என்றார்.



வன்னியிலுள்ள புது மாத்தளன் பகுதி மக்கள் நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்ள வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம்.

வன்னியிலுள்ள மக்களுக்கு கடந்த 2 ஆம் திகதியன்று ஆயிரத்து 30 மெட்ரிக் தொன் அளவிலான உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அடுத்த உணவுத் தொடரணி குறித்து உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அடனான்கான் கருத்து தெரிவிக்கையில், தற்போது அனுப்பப்பட்டிருக்கின்ற உணவுப்பொருட்கள் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு இருபது நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். அடுத்த கப்பல் எப்போது பயணிக்கும் என்பதை சரியாக எம்மால் கூற முடியாதுள்ளது. ஆனால் சில வேளைகளில் இம்மாதத்தில் அடுத்த கப்பலை அனுப்ப முடியுமென நம்புகிறோம் என்றார்.

மேலும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு நிவாரணத்திற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் 19 ஆயிரத்து 490 மெட்ரிக் தொன் பொருட்களை உலக உணவு ஸ்தாபனத்திற்கு வழங்க தீர்மானித்துள்ளது.

தற்பொழுது வன்னிக்கு அனுப்பப் பட்டு வரும் நிவாரணப் பொருட்களில் 65 வீதமானவை இந்த அமெரிக்க முகவர் நிறுவனத்தினால் உலக உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் ஆகும். இந்நிலையில் வவுனியா நலன் புரி நிலையங்களில் மெனிக்பாமிலுள்ள 3ஆவது வலயமான அருணாசல நிவாரணக் கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ரஞ்சினி ஒஸ்வெல்ட் தெரிவித்தார்.

மேலும் UNICEF நிறுவனம் இங்கு தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் ஏழு பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக இயங்குவதால் மக்கள் குடியமர்த்தப்பட்டவுடன் பாடசாலைகளை கற்றல் செயற்பாடுகளுக்கேற்ப புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைகளின் ஜன்னல்கள், பைப்லைன்கள் உடைந்திருக்கலாம். மின்சார வயர்கள் துண்டிக்கப்பட்டிருக்கலாம். அசுத்தப்பட்டிருக்கலாம் ஆகவே அவற்றைச் சுத்தப்படுத்தி திருத்த வேலைகளை மேற்கொண்டு அவற்றைப் பாடசாலை நடவடிக்கைகளுக்கு மீளக் கையளிக்க வேண்டும். அவற்றிற்கான மதிப்பீட்டை நாங்கள் தற்போது மாகாண கல்விப் பணிப்பாளருக்கு வழங்கி இருக்கிறோம் என்றார்.

"மீண்டும் வாழ்வோம்" நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல் 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# "அரசின் எதிர்காலத் திட்டம் குறித்து புலம்பெயர்ந்தவர்களுக்கு விளக்குவது முக்கியமானது"

## அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க



அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளும் நோக்கில் அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களை நேர் கண்டுள்ளோம். அந்நேர் காணலின் சில பகுதிகள் வருமாறு,

*இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலையினையிட்டு இலங்கை அரசாங்கம் எவ்வளவு கரிசனை கொண்டுள்ளது?*

இயங்குதல் என்று வரும்போது மனித உரிமைகள் அமைச்சு மட்டுப்படுத்தப்பட்ட பாத்திரத்தினையே கொண்டுள்ளது. ஏனெனல், இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட அமைப்பாகிய தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இருக்கின்றது. 17 வருடங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் மூலம் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆணைக்குழு இயங்கி வருகின்றது. ஆணைக்குழுவின் பணிகளை வசதிப்படுத்துவதே உண்மையில் எனது பணியாகும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக் கொண்ட ஒரு சுயாதீனமான அமைப்பு இருக்கையில், ஓர் அரசியல்வாதி என்ற ரீதியில் அப் பொறுப்புக்களை நானே எடுத்துக்கொள்ள வேண்டும் என நான் நினைக் கவில்லை. எனவே சட்டமியற்றும் உறுப்பினர்களில் ஒருவன் என்ற ரீதியில் நான் செய்வது என்னவென்றால், சட்டமியற்றல் முறை மூலமாக அச்சட்டத்தினை மேலும் வலுப்படுத்துவதும் பாராளுமன்றத்தின் மூலமாக வளங்கள் ஒதுக்கப்படும் போது ஆணைக்குழுவின் சார்பாக பேசுவதுமேயாகும். இதன் மூலமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையினை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்கள் பெறவேண்டிய பணத்தினை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

*நாட்டிலுள்ள மனித உரிமை நிலை தொடர்பாக சர்வதேச சமூகம் தற்போது அரசாங்கத்திற்கு அழுத்தத்தினை பிரயோகித்து வருகின்றது. இவ்வாறான அழுத்தத்திற்கு நீங்கள் எவ்வாறு எதிர் வினையாற்றுகின்றீர்கள்?*

ஏதாவது தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுமிடத்து அவற்றினை நிவர்த்தி செய்ய நாம் தயாராக இருக்கும் அதேவேளை நான் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடலிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்றேன். நாம் ஆசியப் பிராந்தியத்துடன் மட்டும் பேசாமல் அல்லது எமக்கு ஆதரவு வழங்குபவர்களுடன் மட்டும் பேசாமல் அனைவருடனும் பேசவேண்டும். அத்துடன் எம்முடன் பல பிரச்சினைகள் பற்றிப்பேச விரும்பும் இலங்கை நண்பர்களுடனும் பேச வேண்டும். அப்போது தான் இலங்கையில் உண்மையில் என்ன நடக்கிறது மேலும் இங்கே என்ன நிலை நிலவுகிறது என்பதன் அடிப்படையில் அவர்களால் முடிவுகளை எடுக்க முடியும். மேலும் இங்கே என்ன நடக்கின்றது என்பதிலே மிகமுக்கிய பங்குதாரர் களாக இருக்கும் புலம்பெயர் சமூகத்தினை நாம் எவ்வாறு எட்டலாம் என்பதையும் நான் பார்க்க விரும்புகிறேன். அவர்களைத் துண்டித்து விடாது அவர்களைச் சந்தித்து அவர்களுடன் பேச முயற்சித்து அரசாங்கத்தின் நோக்கம் என்ன அரசாங்கம் என்ன செய்கின்றது மேலும் அரசாங்கம் எதிர் காலத்தில் என்ன செய்யப் போகின்றது என்பதை அவர்களுக்கு விளக்குவது முக்கியமானது என நான் நினைக்கின்றேன். இதன் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்.

உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு

தொ.பே. -0774952242

மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# மீண்டும் ஏ 9 பாதையூடாக தரைவழி வர்த்தகம்

புதுவருடத்தை முன்னிட்டு நாடெங்கிலும் வியாபாரம் சூடுபிடித்து வருகின்றது. எனினும் யாழ். குடாநாட்டு சந்தையில் வியாபாரத்தில் பாரியளவு மாற்றங்கள் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அரசு ஏ9 பாதை மூலமாக மூன்று தடவைகள் வர்த்தகப் பொருட்களை யாழ். குடாநாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளது. புதுவருடத்தை முன்னிட்டு இருபது லொறிகளில் யாழ் குடாவிற்கு அவசியமான உணவு மற்றும் இதர பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் யாழ். குடாவிற்கு அத்தியாவசியமான பொருட்கள் கப்பல் மூலமாகவே அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே அரசு தனியார் வர்த்தகர்களுக்கு ஏ9 பாதை வழியாக வர்த்தகப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு தரை வழியாகப் பொருட்கள் சந்தையை அடைவது யாழ். வர்த்தகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என யாழ் வணிகர் சங்கத்தின் தலைவர் இராசையா ஜனகுமார் தெரிவித்தார்.

மேலும் இது குறித்து அவர் தெரிவிக்கையில்,ஒரு சீரான வியாபாரம் யாழ் சந்தையில் தற்பொழுது நடைபெற்று வருவதாகவும் இதுவரை கப்பல் மூலமாகவே பொருட்கள் வந்து சேர்ந்ததாகவும் எனினும் தற்போது வியாபாரிகள் ஏ9 பாதையூடாக வர்த்தகப் பொருட்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தரை வழியாகப் பொருட்கள் வந்த சேர்வது போக்குவரத்துச் செலவீனத்தைக் குறைப்பதால் மலருகின்ற புத்தாண்டில் மலிவு விலையில் பொருட்களை வழங்க முடியும். இருப்பினும் தரைவழியாக வரும் பொருட்களின் அளவு குறைவாகக் காணப்படுவதால் வர்த்தகத்தில் பாரிய மாற்றம் ஏற்பட சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான வியாபாரத்தில் ஏ9 பாதையானது மிக முக்கிய பங்கினை வகித்து வந்தது. மீண்டும் தரைவழி வர்த்தகமானது ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பாரிய மாற்றங்க



யாழ்ப்பாண சந்தைப் பகுதி

ளைக் காண முடியும் எனினும் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு தற்போது இருபது லொறிகளை மட்டுமே அனுப்பக்கூடிய நிலை காணப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பி.திவாரத்ன தெரிவித்தார். அவர் இது குறித்து விவரிக்கையில்,

வழமையாக வர்த்தகர்கள் பொருட்களைக் கொண்டு வந்து எம்மிடம் ஒப்படைப்பார்கள் நாம் இராணுவப் பாதுகாப்புடன் யாழ் குடாவிற்குப் பொருட்களை எடுத்துச் செல்வோம். இருப்பினும் வர்த்தகர்களே அப்பொருட்களை நேரடியாக கொண்டு சென்றால் குறைந்த விலையில் பொருட்களை வழங்க முடியும் என்பதற்காகவே அரசு இத்தீர்மானத்தை மேற்கொண்டது என்றார்.

தற்போது தரைவழியாகவும் கப்பல் மூலமாகவும் பொருட்கள் யாழ் குடாவை அடைவதால் பொருட்களின் விலையில் தளம்பல் நிலை காணப்படுகின்றது. எனவே தரை வழி வர்த்தகத்தை அதிகரித்து கடல் வழி வர்த்தகத்தை குறைக்க வேண்டுமென்பதே யாழ். வணிக சங்கத்தின் வேண்டுகோள். எனினும் தற்போதைய நிலையில் மாதத்திற்கு இரு முறை மாத்திரமே பொருட்களை தரை வழி யாக அனுப்புவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக அத்தியாவசிய தேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் வாழ்வோம்

"மீண்டும் வாழ் வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவா களுக்காகவும் தகவல் களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

இயேசுவை முரடர்கள் கசையால் அடித்தனர்; அலைத் தலைத்து துன்புறுத்தினார்கள்; அவர் முகத்தில் எச்சில் உமிழ்ந்தனர். ஆனால் இயேசுவோ, பிதாவே! இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்றார்.

*–விவிலியம்*

வலம்புரி

# பாவகாரிகளுக்குப் பாடம் புகட்டும் யேசுபிரானின் உயிர்ப்பு

இன்று உயிர்த்த ஞாயிறு. யேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டு மூன்றாவது நாள் உயிர்த்தெழுந்த தினம்.

மானிடத்தை வழிநடத்த வந்த யேசுபிரானை சிலுவையில் அறைந்த மூடர்கள் வாழ்ந்த இந்தப் பூமியில் பாவங்கள் தொடரவே செய்கின்றன.

மானிடத்தை வழிப்படுத்த பூமியில் உதித்த பிதாமகனை சிலுவையில் அறைந்தபோது அதனைத் தடுக்க யாராலுமே முடியவில்லை.

இந்தநிலை அன்று யேசுபிரானுக்கு என்றால், இன்று ஈழத்தமிழர்களுக்கு என்று கூறி விடலாம்.

இனத்தால், மொழியால் நடக்கும் யுத்தம் மனித உயிரை பலியெடுக்கிறது. தடுக்கவும் தவிர்க்கவும் முடியவில்லை.

ஆட்சியாளர்கள் மத்தியில் சிறுவர், முதியவர், பெண்கள் என்ற எந்த வேறுபாடும் இன்றி இனத்துவ வேறுபாடே மேலோங்கியுள்ளது.

இந்நிலையில் யேசுபிரானின் உயிர்ப்புப் பற்றிய தத்துவங்களை ஒரு கணம் மீட்பது பொருத்துடையதாகும்.

திசைமாறிச் செல்லும் மானிடத்தை வழிநடத்த வந்த யேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டார்.

இறைபிரானையே இனங்காணமுடியாத பாவகாரிகள் இரக்கமற்ற ஈனச்செயலைச் செய்தனர்.

உயிர்ப்பறிப்பிலும் உத்தமர் யேசு சலனமடையவில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. யேசுபிரானை சிலுவையில் அறைந்தமைக்காக உரியவர்கள் வருந்துவார்கள் என்பதே நியதி.

அந்த நியதி தனித்து இறைமகனுக்கு மட்டும் உரியதல்ல. ஏழைகள், ஏதுமறியாதவர்கள், அப்பாவிகள் இவர்களைத் தண்டிப்போரும் அதன் விளைவை நிச்சயம் அனுபவிப்பர்.

இன்றுவரை வன்னியில் மனித அவலம் தொடர்கிறது.


நலன்புரி நிலையங்களில் தமிழ் மக்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகையதோர் நிலைமை சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்படுமா என்றால், இது சிங்கள தேசம். எங்கள் தேசத்தில் எங்கள் இனத்திற்கு ஏது தண்டனை என்பர் ஆட்சியாளர்கள்.

தமிழர்கள் வந்தேறுகுடிகள் - அவர்கள் பெரும்பான்மை இனத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்கள். பெரும்பான்மைப் பலத்தில் அவர்கள் சாகடிக்கப்படலாம். சிறைகளில் அடைக்கப்படலாம். முகாம்களில் முடக்கப்படலாம் அதுபற்றியெல்லாம் எவரும் கேட்கமுடியாது.

இந்த இறுமாப்பில் இருப்போரை சிந்திக்க வைக்க யேசுபிரானின் உயிர்ப்பின ஞாபகம் நினைவூட்டப்படுகின்றது.

# உயிர்ப்பின் உத்தானத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்



"அஞ்சாதீர் சிலுவையில் அறையுண்ட இயேசுவே இறந்தோரிடம் இருந்து உயிர்த்து விட்டார். என்ற செய்தியை சீடருக்கு அறிவியுங்கள்" என வானதூதரின் செய்திகள் இன்றும் மகிழ்ச்சியோடு உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

"கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருள் அற்றதே" என்கிறார் புனித சின்னப்பர். எந்தப்பாடுகளுக்கும், துன்பத்துக்கும் விடுதலை உண்டு என்பதை நம்பிக்கையூட்டும் செய்திதான் உயிர்ப்பின் நற்செய்தி.

சாவுக்கு சவாலாகி, சரித்திரம் படைத்த நாயகன் இயேசுவின் நம்பிக்கை வார்த்தைகள் இன்றும் பலதுன்ப துயரில் வாடும் மக்களுக்கு உயிர்பூட்ட வேண்டும், நம்பிக்கையூட்ட வேண்டும், ஆற்றுப்படுத்த வேண்டும், ஆறுதல் ஊட்ட வேண்டும், அன்பை வெளிப்படுத்த வேண்டும். இதனை கண்டு விசுவசித்தவரை விட காணாமல்விசுவாசம் கொண்ட கிறிஸ்துவின் அன்பு சீடராகி உயிர்ப்பின் அனுபவத்தை பகிரும் உணர்வூட்டும் பணிகள் மூலம் எம்முன்னே காணும் கிறிஸ்துவின் சாயல்களில் துன்புறும் மனிதம் காக்கும் புனிதப் பணிகளால் உயிர்ப்பின் மறுவடிவத்தை தரிசிக்கும் பணிகளால் உயிர்ப்பின் செய்தியை வெளிப்படுத்துங்கள்.

மாண்புறும் இறைசாயலான மனிதம் சிதைக்கப்பட்டு சிலுவைச் சாவின் தளும்புகளுடன் மீட்பின் தேடலுக்காய் ஏங்கித் தவிக்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பகிரும் மனங்கொண்டோரே சீடத்துவ பணிகளால் உள்ளன்போடு உயிர்ப்பூட்டும் உறவாடல், உரையாடல், உணர்வுப் பகிர்வுகள் மூலம் நம்பிக்கையூட்டும் உயிர்ப்பை பகிர்ந்து கொள்ள முன் வாருங்கள்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிழ்வு சீடர்களுக்கு மட்டுமல்ல சிதைக்கப்பட்ட மனிதம் மீட்கப்படவும் ஒளியேற்றும் பணிகளாக மாறும் போதுதான் உண்மை உயிர்ப்பை உலகம் அனுபவிக்கும்.

துன்புறுத்தப்பட்ட கிறிஸ்துவின் சாயல்களில் மனிதம் மரணிக்கின்ற வேளையில் அன்புக்காக, ஆதரவுக்காக, அல்லல்படும் மானுடத்தின் உயிர்ப்புக்காக உழைக்கும் கிறிஸ்தவ சீடர்களே உயிர்ப்பின் உத்தானத்தை, மாற்றத்தை ஏற்படுத்தும் மனித மாண்பை உயிர்ப்பிக்கும் பணிகள் மூலம் வெளிப்படுத்தி உயிர்ப்பூட்ட வாருங்கள்.

யோசப்பாலா

# விடுதலைப் புலிகளுக்கு ஐ.நாவுடன் தொடர்பு

## இலங்கை அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் விடுவிக்கப்படாதிருக்கும் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருக்கும் விடுதலைப் புலித் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்பில் உள்ளமை தெரியவந்திருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களிடம் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் முல்லைத்தீவிலுள்ள பாதுகாப்பு வலயத்தில் இருந்து கொண்டு ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர் எனக் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன என ஜனாதிபதி செயலகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அதிகாரிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொலைபேசியில் நடந்த உரையாடலுக்கு நோர்வே ஏற்பாடு செய்து கொடுத்ததாக வெளியான குற்றச்சாட்டுக்களை நோர்வேக்கான தூதுவர் மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகள் இன்னமும் ஐ.நாவுடன் தொடர்பில் இருப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது. (ஓ-6)

# இலங்கைத் தமிழர்களுக்காக பாராளுமன்றத்தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

(சென்னை)

இலங்கையில் ஈழத்தமிழ் மக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும், பாராளுமன்றத்தேர்தலை புறக்கணிக்க கோரியும் மக்கள் கலை இலக்கிய கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத்தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மெமோரியல் ஹோல் அருகில் நடைபெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தில் 100ற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர். இது குறித்து புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் மாவட்ட செயலாளர் கார்த்திக் கூறுகையில்,

நாங்கள் கடந்த 5 மாதமாக இலங்கையில் கொல்லப்படும் தமிழர்களை காப்பாற்றக்கோரி போராடி வருகின்றோம். முன்பு நடத்திய போராட்டத்தின் போது தேனாம்பேட்டை இராணுவ முகாமை முற்றுகையிட்டுப்போராடினோம். இலங்கையில் நடக்கும் போரில் இலங்கை இராணுவத்திற்கு இந்திய இராணுவம் உதவி செய்து வருகிறது. ஆகவே இலங்கை அரசு நடத்தும் போரில் இந்திய அரசை நம்பி எந்தப்பயனும் இல்லை. இலங்கை தமிழர்களுக்காக போராடுகிறோம் என்ற பெயரில் சில கட்சிகள் போராடி வருகின்றனர். அவர்கள் அனைவரும், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை புறக்கணிக்கவேண்டும் என்றார். (ஓ-6)

# உயிர்ப்பு வாழ்வு

இறைவா! இதோ கருவறை முதல் கல்லறை வந்தேன். இந்தக் கல்லறையும் எனக்கொரு சிறை வாழ்வா?... அல்லது...! இது ஒவ்வொரு மனிதனின் உள்ளத்து ஏக்கமாக இருக்கின்றது. இந்த மானிட வாழ்வே ஒரு சிறை வாழ்வாக மாறுகின்ற நிலை இன்று. இம் மனிதரின் உள்ளத்து ஏக்கங்களுக்கு விடை என்ன?

விடை இயேசுவின் உயிர்ப்பில் தான் உண்டு. இயேசுவுக்கும் அவரின் பணி வாழ்வு ஒரு தோல்வியாக முடிந்து விட்டதோ என்ற ஒரு தவிப்பு, ஏமாற்றம். எனவேதான் சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்த போது இயேசு தந்தையை நோக்கிக் கதறுகிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

"தந்தையே! ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?"

ஆனால், அவரின் இந்த கேள்விக்கு விடையும் அவரின் அடுத்த வார்த்தையிலே உள்ளது. "தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்"

ஆம், என்று இயேசு, தந்தையின் கையில் தன் ஆவியை ஒப்படைத்தாரோ அன்றே, அப்போதே தந்தை அவரை மகிமைப்படுத்தினார்.... உயிர்ப்படையச் செய்தார்.


இயேசு உயிர்த்து விட்டார். அவர் மட்டும் உயிர்க்கவில்லை. நமக்கும் உயிர்ப்பில் பங்கு கொடுத்தார். எனவே நாமும் உயிர்க்க வேண்டும் என்றால், அவரோடு நாமும் இறக்க வேண்டும். இதைத்தான் பவுலடியார் உரோமையர்க்கு எழுதிய திருமுகத்தில் கூறுகிறார்.

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு நாமும் வாழ்வோம்"

இயேசு உயிர்த்துவிட்டார் என்பதற்கு என்ன ஆதாரம்?

**1. விவிலியக் கூற்று**

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்.



**2. விசுவாச சாட்சிகள்**

இயேசு உயிர்த்தார் என்பதற்குச் சாட்சிகளின் கூற்றும் ஆதாரமாக இருக்கின்றது. முதல் வாசகத்தில் பேதுருவின் சாட்சியே இதற்கு ஆதாரம். மக்கள் அவரை சிலுவையில் தொங்கவைத்துக் கொன்றார்கள். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பி காட்சி அளிக்கச் செய்தார்... இறந்த அவர் உயிர்த்தெழுந்த பின்பு அவரோடு உண்டு குடித்த நாங்களே இதற்கு சாட்சிகள்.

**3. வெற்றுக் கல்லறை**

இயேசுவின் உயிர்ப்பிற்கு இன்னொரு அடிப்படை ஆதாரம் அவர் புதைக்கப்பட்ட கல்லறை வெறுமையாய் இருந்தது. அப்படியென்றால் அவர் உயிர்த்துவிட்டார் என்பதுதான் பொருள். இது இன்றைய நற்செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இனி இயேசுவின் உயிர்ப்பு நமக்கு அளிப்பது என்ன? இயேசுவின் உயிர்ப்பால் நமக்குப் புதுவாழ்வும் புதுபடைப்பும் கிடைத்திருக்கின்றன. இதை வாரத்தின் முதல் நாள் என்ற சொற்றொடரிலிருந்து புரிந்து கொள்கிறோம். புது விடியலைப் பற்றி இங்கு யோவான் பேசுகிறார்.

இயேசுவின் உயிர்ப்பு நமக்கு புதிய மதிப்பீடுகளைக் கொடுக்கிறது.

"இனி நாம் இறப்பின் மக்கள் அல்ல மாறாக உயிர்ப்பின் மக்கள்"

இயேசுவில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் செய்தி இதுவே, புதுவாழ்வு, புது படைப்பு புதிய மதிப்பீடுகள். இவைகளை வாழ்வாக்குவோம். இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகிர்வோம். அந்த இயேசுவின் உயிர்ப்பை நமதாக்கி கொள்வோம்.

*ஜோன் ரொபேர்ட்.*

# உள ஆரோக்கியத்தை பேணுவதன் மூலம் நல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம்!

இன்றைய போரினால் ஏற்பட்டுள்ள மனித அவலங்களுக்கு இடையே எமது வாழ்க்கையை ஆரோக்கியமாக முன்னெடுப்பதற்கும் சவால்களை தைரியமாக எதிர்கொள்வதற்கும் உள ஆரோக்கியம் (Positive Mental Health) ஒவ்வொரு பொது மகனிடமும் கட்டி எழுப்பப்பட வேண்டும். இதுவே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

எமது மனதில் எழுகின்ற நல்ல சிந்தனைகள் தம்மை சமூக சீர்திருத்தவாதியாக, தத்துவவாதியாக, நல் ஆசிரியராக மாற்றி எமக்கும் எம்மைச்சார்ந்தவர்களிற்கும் நன்மையளிக்க வைக்கின்றன. தூய்மை ; நல் அதிர்வுகள் (good Vibrations); மனதிற்கு இதமான மெல்லிசை; இள்ம் நிறங்கள் (light colours) உள ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.

'உலகம் உருண்டையானது' என முதன் முதலில் கூறிய விஞ்ஞானி கல்லால் அடிக்கப்பட்டான். பின்னாளில் அதுவே உண்மைக் கூற்றாகியது. இதனை மனதில் நிறுத்திக் கொண்டு தொடர்ந்து செல்வோம்.

நம் சமுதாயத்தினருள் பலர் மூடநம்பிக்கைகள்; மற்றவர்கள் சொல்வதை சரி எனும் 'பேதை' மனப்பாங்கு ; எல்லாவற்றிற்கும் மேலாக மற்றவர்கள் புரியும் குற்றங்கள், பிழைகள், தவறுகள் என்பவற்றை மட்டும் நினைவில் வைத்திருக்கின்றனர். இதனால் அவர்களிற்கு மன உளைச்சல் (FEELING FLUE) ஏற்படுகிறது. அதாவது மன உளைச்சல் அவர்கள் மனதை உடைத்து விடுகிறது. முகத்தில் கடுமை, ஒவ்வொரு நரம்பிலும் வலி இப்படியாக உணர்கின்றார்கள். இவ்விதமாக வீணான எண்ணங்கள் ஓடிக்கொண்டிருப்பதால் புத்தி பேதலிக்கின்றது. மனத்தளர்ச்சியும் வெவ்வேறு நோய்களும் உருவெடுப்பதுடன் இருக்கின்ற நோய்களும் தீவிரம் (BECOME SEVERE) அடைகின்றது.

நாம் எதை விதைக்கின்றோமோ அதைத்தான் அறுவடை செய்கின்றோம் (WE REAP WHAT WE SOW) "கண்ணிற்கும் காதிற்கும் இடைப்பட்ட தூரம் நான்கு விரல்களே" என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரு கருத்தினை ஒருவர் சொல்லும்போது அவர் சுபாவமும் சேர்ந்து கொள்கின்றது. அதேபோல, நீங்கள் மற்றவரை தூற்றும்போது (CRITICISE) அது உருப்பெருக்கும் கண்ணாடி போன்று கெட்ட எண்ணங்களை (NEGATIVE THOUGHTS) உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திவிடும். தூற்றுதலினால் உங்களுள் உருவாக்கிக் கொள்ளும் கெட்ட எண்ணங்கள், கோபம் உங்கள் சுயத்தை அழிக்கின்ற உணர்வு என்பதை நினைவில் நிறுத்துங்கள். தவிர, தங்களுடைய ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்காது மற்றவர்களை தூற்றுவதன்மூலம் (DEFAMING) சிலர் புகழடைய விரும்புவதும் சமுதாயத்தில் கண்கூடாகவுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான மனோ விளைவு அல்ல என்பதை நாம் எப்போதும் மறந்து விடக் கூடாது.

இதற்கு அப்பால், தமது மன அதிர்வுகளை தொடர்ச்சியாக தம்மிடம் வருகின்ற நோயளர்களிடம் மருத்துவ உத்தியோகத்தர்கள் செலுத்திய வண்ணம் (TRANSFER) உள்ளனர். அவர்களிடம் ஏற்படுகின்ற கோபம் (ANGER) மன அழுத்தம் (TENTION), முரண்பாடுகள் (CONFLICTS) எல்லாம் நோயாளியிடம் பிரதிபலிக்கின்றன. இது மருத்துவம் சார்ந்த ஏனைய உத்தியோகத்தவர்களிற்கும் (PARA MEDICAL STAFF) பொருந்துகின்றது. உலகில் 10 பேரில் ஐவர் (05) உள பாதிப்புக்குள்ளாகின்றனர் என (WHO) (உலக சுகாதார ஸ்தாபனம்) தெரிவிக்கின்றது. இலங்கையில் 05-10% ஆனவர்கள் உள ரீதியான பிரச்சினைகளிற்கு (MENTAL DISORDERS) உட்படுகின்றார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறம் இருக்க, நமது பிரதேசங்களிலோ நவீன வசதிகளுடன் அதிகளவில் வைத்தியசாலைகள் போட்டி போட்டு ஆரம்பிக்கப்படுகின்றன. வரவேற்கத்தக்கதாயினும் தீவிரமாக சிந்தித்து பார்க்கவேண்டிய கட்டாயம் நம் ஒவ்வொருவரிற்கும் இருக்கின்றது. ஒரு பிரதேசத்தில் ஐந்து, பத்தென கிளினிக்குகளும் வைத்தியசாலைகளும் ஆரம்பிக்கப்படுவது ஆரோக்கியமான நிலைமையா? சிந்தியுங்கள். முன்னர் "எனக்கு சர்க்கரை வியாதி (DIABETES)" என்று பணம் படைத்தவர்கள் பெருமைப்பட்டதுண்டு. இது போலவே நம் பிரதேசத்தில் அதிகளவில் நவீன வசதிகளுடன் வைத்தியசாலைகள் உள்ளன என்று நாமும் பெருடைப்பட்டுக் கொள்வோம். ஏனெனில் இது இன்றைய எமது சமுதாயத்தின் சாபக்கேடு. எப்போது எம் மக்களின் இந்த மனப்பாங்கு (ATTITUDE) ஆரோக்கியமாக மாற்றப்படுகின்றதோ, அன்று மருத்துவ உலகம் சாதனை படைத்துவிட்டதாக கொள்ளலாம்.


மேலும் தடிமன், காய்ச்சல் வந்தால் நோயாளர்களை வீட்டு வைத்தியம் மூலமோ, வேறு மருத்துகளை வைத்திய ஆலோசனைப்படி உட்கொண்டோ மீட்டுவிடும் நமக்கு உள நோயாளர்களை மட்டும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை 'பைத்தியம்', 'மெண்டல் (MENTAL)" இப்படியாகப் பெயர் சூட்டி (LABEL) சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்த விடுகின்றோம். படித்தவர்கள் தான் அதிகமாக இப்படியான தவறுகளை செய்வது சகித்துக்கொள்ளவும் மன்னிக்க முடியாததுமான குற்றமாகும். ஆனால் அவை "படித்தவன்", "மேலதிகாரி" என்ற முகமூடிக்குள் மறைந்து விடுவது வேதனைக்குரியது. நட்புறவு, உதவி செய்யும் மனப்பாங்கு, இன்சொல் பேசல் போன்றவற்றையும் சாதாரணமாக பரீட்சைகளிற்கு படித்துவிட்டு மறந்துவிடுவது போல் மறந்துவிட்டார்களோ என்னவோ?

இவை ஒருபுறமிருக்க தற்கொலைகள் (SUICIDAL ATTEMPTS) மறுபுறம் பயமுறுத்துகின்றது. இலங்கையில் வருடத்தில் 5ஆயிரம் பேர் வரையில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதில் 50% ஆனவர்கள் பல்வேறு உளநோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றே அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே நாம் உளநோயளர்களை மனித நேயத்துடன் எம்முள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். தவிர, பின்வரும் நற்பண்புகளை கட்டி எழுப்புவதற்கு உறுதி பூண வேண்டும்.

1. நாம் நமக்காகவே படைக்கப்பட்ட தனித்திறமை கொண்ட ஒருவர் என்பதை நன் கு மனதில் பதித்துக் கொள்வோம்.
2. நற்சிந்தனைகளை (POSITIVE THOGHTS) வளர்த்துக் கொள்வோம். சற்சங்கம், பஜ்னை போன்றவற்றில் பங்குபற்றலாம்.
3. நன்மை செய்யாவிட்டாலும் தீமையை செய்யூது விடுவோம்.
4. மற்றவர்களின் கெட்ட குணங்களை கிரகிப்பதை விடுவோம்.
5. தீய குணமுடையவர்கள் வாழும் சூ ழ லிலிரு ந் து விலகி இருப்போம்.
6. நலிந்தவர்களிற்கு உதவுவதற்காக ஓர் நாளின் சில மணிகளை ஆவது ஓதுக்கிக் கொள்வோம்.
7. பழிவாங்கும் எண்ணத்தை கைவிடுவோம்.
8. பணிவுடனும் மகிழ்ச்சியுடனும் எப்போதும் இருப்போம்.
9. எதையும் சிரத்தையுடன், சிந்தித்து செயற்படுவோம்.
10. எமது பாத்திரத்தை சிறப்புற நடிப் பதற்கு மட்டுமே இந்த உலகில் உரிமையுண்டு எப்போதும் இதை மனதில் நிலை நிறுத்துவோம்.
11. காலம் ஒரு சிறந்த மருத்துவன் (HEALER) என்பதைப் புரிந்து கொள்வோம்.

இவை அனைத்துக்கும் மேலாக,

12. மனித குல மேன்மைக்காக சித்தர்களும் முனிவர்களும் குறிப்பிட்டுள்ள மூச்சுப் பயிற்சி (பிரணாயாமம்), உடலைத் தளர்த்தும் பயிற்சிகள், யோகாசனப் பயிற்சிகள் போன்றவற்றை ஒரு குருவின் மூலம் அல்லது வைத்திய ஆலோசணைப்படி தினசரி தவறாது செய்யுங்கள். இதனால் உடலும் உள்ளமும் ஒத்திசைவு பெற்று ஆரோக்கிய வாழ்க்கை கை கூடும்.
13. மூலிகைத் தோட்டங்கள் அமைப்பது, இனிய மெல்லிசைகளை கேட்பது சிறந்த உள ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் பொழுது போக்காக அமையும்.




**உள ஆரோக்கியமும் இசையும்**

இசைக்கும் மனிதனின் நடத்தை மாற்றங்களிலும் (BEHAVIOUR CHANGES) குணாதிசயங்களிலும் (ATTITUDE) கூட மாற்றத்தை ஏற்படுத்தும் தன்மை உண்டு என்பதை மிகச் சிலரே அறிந்து வைத்திருக்கின்றனர்.

'இசை' ஓர் சிறந்த பொழுதுபோக்கு என்பதற்கு அப்பால் மனிதனின் கொடூர மனப்பான்மையை (AGGRESSIVE BEHAVIOUR) சாந்தப்படுத்தும் ஓர் அற்புத சாதனம் ஆகும். இச்சாந்தப்படுத்தும் தூண்டற்பேறு பரிவு

**Dr. S. குமுதினி**
**பொது சுகாதார ஆயுள்வேத வைத்திய அதிகாரி, வடமராட்சி தெற்கு, மேற்கு.**

நரம்புகளின் (SYMPATHETIC NERVES) செயற்பாடுகளை மந்தப்படுத்தி பர பரிவு நரம்புகளின் செயற்பாட்டை அதிகரிப்பதாக கருதப்படுகின்றது. சரியான முறையில் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் உதாரணமாக 'ஓம்' எம்முள் அதிசய உள மாற்றத்தை ஏற்படுத்துவது அனைவரும் உணர்ந்தது. தற்காலத்தில் சத்திரசிகிச்சைகள் மெல்லிய இசைகளின் உறுதுணையுடன் மேற்கொள்ளப்படுவதும் பல மனோதத்துவ நிபுணர்களின் சிகிச்சைகள் இசையுடனே ஆரம்பிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

" எங்கே ஆரோக்கியம் இருக்கின்றதோ, அங்கே நம்பிக்கை இருக்கிறது. எங்கே நம்பிக்கை இருக்கிறதோ, அங்கே அனைத்தும் கிடைக்கிறது"

**"HEALTH IS EVERY THING"**

# இராணுவத்தினரின் உபாயங்களை என்னால் தெளிவுபடுத்த முடியாது

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு) மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்ற நிலையில் பாதுகாப்பு வலயத்திற்குள் படையினர் எவ்வாறான தாக்குதல்களையும் மேற்கொள்ளமாட்டார்கள். அந்த வலயத்திற்குள் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்காக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் உபாயங்கள் தொடர்பில் என்னால் தெளிவு படுத்த முடியாது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

மனிதாபிமன நடவடிக்கைகளின் போது செல் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. கிட்லர் இருந்த நிலையிலேயே புலிகள் இன்று இருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், மரணிக்கவிருப்போர் எதையும் கூறுவார்கள் என்பதனால் அவற்றையெல்லாம் கேட்க வேண்டாம். புலிகளுக்கு இதற்கு மேல் எதனையும் செய்ய முடியாது என்பதனால் அங்குள்ள மக்களை புலிகளே கொலை செய்வார்கள் அங்கு இடம்பெறுகின்ற சம்பவங்களை வைத்துக்கொண்டு ஜனநாயக அரசாங்கத்தை பயங்கரவாத கண் கொண்டு பார்க்க வேண்டாம்.

இஸ்ரேல் இராணுவத்தினர் பல்வேறு உபாயங்களை கையாண்டனர். இந்நிலையில் சக்தி மிக்க ஒழுக்கமுள்ள இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற மனிதாபிமான நடவடிக்கைகளை தெளிவு படுத்த முடியாது. சர்வதேச யுத்த சட்டத்திற்கு அமைவாகவே எமது நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்றார். (ஓ-6)

# பிரித்தானிய பிரதிநிதியின் கருத்துக்கு அரசு எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் விரைவில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுமென பிரித்தானிய பிரதமரின் விசேட பிரதிநிதி டெஸ்ட் பிறவுண் வெளியிட்டுள்ள கருத்துக் குறித்து அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான உறுதி மொழிகளின் மூலம் இலங்கையின் உள் விவகாரங்களில் பிரித்தானியா தேவையில்லாமல் தலையீடு செய்வதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் ஊடாக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலி ஆதரவாளர்கள் பிரித்தானியாவிடம் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது டெஸ் பிறவுண் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் போர் நிறுத்தமொன்றை அமுல்படுத்துமாறு கனேடிய அரசாங்கம் விடுத்த கோரிக்கையையும் இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

(ஓ-6)

# ஈழத் தமிழனை கைவிட்ட சர்வதேசம்



ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்கிறார்கள். ஆனால் ஈழத் தமிழினமோ அழிந்துகொண்டே இருக்கிறது.

எங்கள் மரணத்தினால் இன்னொரு தேசத்தின் இறையாண்மையை காப்பாற்றிய பெருமை கிடைக்கட்டும்...



தினம் தினம் வீசப்படும் குண்டுகளில் எமது உறவுகள் செத்து மடிகின்றன.

மரம் ஏறி விழுந்தவனை மாடேறி மிதித்ததாம். அப்படி இருக்கு இந்திய – தமிழக அரசுகளின் ஒப்பனை வசனங்கள்.

ஒரு பக்கம் அம்மா, வயதான ஐயாவுக்கு கடிதம் எழுதுகின்றாராம் தீர்வு காணவும் போரை நிறுத்தவும் வலியுறுத்துவோம் என்று.

இன்னொரு பக்கம் ஆயுதங்களை பரிசளிப்பாராம். அவர் ஒரு வயோதிபர்; அரசியல்வாதி அவருக்கு குடும்பம் இருக்கிறது, நாம் யார் அவருக்கு? திரைப்பட நடிகர்களா அல்லது பெரிய அரசியல்வாதிகளா ? வெறும் ஈழத்தமிழர்கள் தானே. அற்ப உயிர்கள் தானே? நாங்கள் உயிரோடு இருந்து என்ன சாதித்துவிடப் போகிறோம்? தேர்தல் காலங்களில் வாக்கு வாங்க உதவலாம் எங்கள் செத்த வீடுகள்.

இழந்து போகும் மவுசை திரும்ப தேரில் ஏற்ற எந்த அரசியல்வாதியும் ஈழத்தமிழன் என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருக்கட்டும் .

அட விடுங்கப்பா... யாருமே உதவப்போவதில்லை எனத் தீர்மானித்து விட்டோம்.

என்ன நடந்துவிடப் போகிறது. இனிமேல் இத்தனை நாள் நடந்ததைவிட பெரிதாக?

ஒருவர் ஈழத்தமிழருக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்பார். இரண்டு நாளில் அதை காலவரையறை யற்ற உண்ணாவிரதமாக்குவார்.

இன்னும் இரண்டு நாட்களில் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க உண்ணாவிரதத்தை முடித்தேன் என்பார்.

அதையும் மௌனமாக பார்த்துக்கொண்டு இருப்பதைத் தவிர ஈழத்தமிழனால் என்ன செய்ய முடியும்!

இன்னொருவர், உதவுவதாக அரசியல் கூத்துக் காட்டிய போது அவரது முதலைக் கண்ணீரை நம்பினார்.

அவர் உதவவில்லை என்றதும் விலகினார். இந்தத் தவறுகளை இன்னொரு தடவை செய்யாதிருக்கலாம். எங்கள் உயிர் அவலங்களை இவர்கள் கையில் எடுத்து அரசியல் செய்யாமல் இருக்கட்டும்.

எங்களை வைத்து உடன் பிறப்புகளுக்கு கவிதை எழுதுவது எப்படி என்று புளுகாமல் இருக்கட்டும்.

எங்கள் அவலங்களையும் மரண ஓலங்களையும் வைத்து தேர்தலில் வாக்குக்கேட்காமல் இருக்கட்டும்.



இன்னொரு உண்ணாவிரத நாடகத்தையோ, மனித சங்கிலியையோ அல்லது கவிதையையோ பார்த்து நம்பிக்கையோடு வாய்பார்த்து ஏமாறமாட்டோம் அரசியல்வாதிகளே!

## எல்லோரும் கைவிட்டார்கள்


கடவுளும் எமக்கு கைகொடுக்க வில்லை? அப்பமாக, அவல் பொரியாக, மோதகமாக வாங்கி உண்ட கடவுள் எம்மைக் கைவிட்டு விட்டாராம்?

உலகமெல்லாம் வாய் நிறைய புன்னகையோடு வாழும் மனிதர்களே எப்படி வாய் நிறைய அழுகிற இந்த மனிதர்களைப் பார்க்க முடிகிறது உங்களால் ? என்ன செய்யப் போகிறீர்கள்?

அம்பலவன் பொக்கணையிலும் வலைஞர்மடத்திலும் புதுமாத்தளனிலும் பதைபதைக்க துடிதுடிக்க நாளொரு பொழுதாக செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள் எமது உறவுகள். ஈழத்தமிழர்கள் என்ன இருண்ட கண்டத்திலா அந்தரிக்கின்றார்கள். இன்று அஞ்சி ஓடி அவலப்பட்டுச் செத்து மடிபவர்கள் யார்? அவர்கள் யாரிடம் வேண்டுகை வைப்பார்கள்?

நேற்று வரை உலகம் அவர்களையே அதிகம் பேசியது. வன்னியில் நிமிர்ந்துள்ளோர் என உற்றுப் பார்த்து உறவாடியது.

ஆனால் இன்றோ? அழியட்டும் அவர்கள் என துயில் கொள்கிறது? என்ன செய்யும் உலகம் எங்கள் உறவுகளுக்கு.



## எப்போது புரியும்!

தோற்கிற குதிரையில் பணம் கட்டாத உலகம். போர் நடைபெறும் நாட்டில் பணத்தை இறைக்கும் நாடுகளின் எதிர்பார்ப்புகளுக்குப் பின்னால் உள்ள ராஜதந்திரம் புரியவில்லை.

மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு மீன்கள் போல் தமிழரின் கண்ணீருக்கு கருணையையும் இலங்கை அரசின் போருக்கு நிதியையும் கொடுக்கும் சர்வதேசத்தின் நிலைப்பாடு மாறாத வரைக்கும் இலங்கை அரசின் போர் வெற்றியையும் தமிழ் மக்களின் சாவையும் கண்ணீரையும் இலகுவில் தணித்துவிட முடியாது.

## ஐ.நாவும் மௌனம்

ஐ.நாவோ அடிக்கடி அறிக்கை விடுகிறது. இரத்தக்களரி ஏற்படும்முன் போரை நிறுத்துங்கள் என்று.

அதற்குள்ளும் இலங்கை அரசை முறிக்காமல் இரு தரப்பும் பொதுமக்களின் உயிரைக் காப்பாற்றுங்கள் எனக் கூறி தப்பிக்கிறது.

வன்னி மனிதப் பேரவலம் போன்று இன்னுமொரு நாட்டில் நடக்குமாயின் ஐ.நா. செயலாளர் முதல் அவரைச்

**உருத்திரன்**

சூழவுள்ள பிரதிநிதிகளும் அந் நாட்டுக்கு நேரில் விஜயம் செய்திருப்பர். அத்துடன் ஓர் ஆயிரம் பேர் சாவதற்குள் போரையும் நிறுத்தியிருப்பர்.

ஆனால் ஈழத் தமிழினமோ ஒரே நாட்டிற்குள் இன்னொரு இனத்தினால் அடக்கப்பட்டு வரும் சிறுபான்மை இனமாக மாறிவிட்டதே.

உலகில் எந்தவொரு மூலையிலும் மனித உரிமை மீறல் இடம்பெறுமாயின் அதனைத் தடுத்து நிறுத்தவே ஐ.நா.நிறுவப்பட்டது. எனினும் எமது இனம் அழிவதைத் தடுக்க ஐ.நா. மௌனமாக இருக்கின்றது எனில், அதில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் மௌனமே காரணம்.

ஒரு கட்டத்தில் சர்வதேச நாடுகள் பல ஈழத்தமிழருக்கு உதவி புரிய .முனைப்புக்காட்டின. ஆனால் அயல் நாடாகிய இந்தியா தனது வல்லாதிக்கம் இலங்கையில் இல்லாமல் போய்விடும் என அஞ்சி அதனைத் தடுத்தது.

காரணம், மாலைதீவைப் போன்று இலங்கையையும் தன்வசப்படுத்தி உலகின் வல்லரசாக இல்லாவிட்டாலும் தனது அயலில் உள்ள சிறிய நாடுகளுக்கு வல்லரசாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பே. ஆனால், இலங்கை பௌத்த இனம் சீனாவுடன் உறவாடும் போது இந்தியாவுக்கு புரியும் ஈழத்தமிழரின் உறவு.

அப்போது விண்டோஸ், விஸ்ராவில் பதியப்பட்ட இப்போதைய ஈழத் தமிழரின் படுகொலை ஒளிப்பதிவுகளை இந்தியா புதிய கணனி இயக்கும் மென்பொருள்களில் பயன்படுத்த முடியாமல் கவலைப்படும்முனைப்புக்காட்டின. ஆனால் அயல் நாடாகிய இந்தியா தனது வல்லாதிக்கம் இலங்கையில் இல்லாமல் போய்விடும் என அஞ்சி அதனைத் தடுத்தது.

காரணம், மாலைதீவைப் போன்று இலங்கையையும் தன்வசப்படுத்தி உலகின் வல்லரசாக இல்லாவிட்டாலும் தனது அயலில் உள்ள சிறிய நாடுகளுக்கு வல்லரசாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பே. ஆனால், இலங்கை பௌத்த இனம் சீனாவுடன் உறவாடும் போது இந்தியாவுக்கு புரியும் ஈழத்தமிழரின் உறவு.

அப்போது விண்டோஸ், விஸ்ராவில் பதியப்பட்ட இப்போதைய ஈழத் தமிழரின் படுகொலை ஒளிப்பதிவுகளை இந்தியா புதிய கணனி இயக்கும் மென்பொருள்களில் பயன்படுத்த முடியாமல் கவலைப்படும்.

■

# கைதடி நலன்புரி முகாமில் இருந்தவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றம்

## கடும் மழை காரணமாக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மழை காரணமாக கைதடி நலன்புரி முகாம்களிலிருந்த இடம்பெயர்ந்த மக்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வன்னியில் இடம் பெற்று வரும் மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்து குடா நாட்டுக்கு வந்த மக்கள் கோப்பாய், திருநகர், கைதடி, கொடிகாமம் மற்றும் மிருசுவில் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் கைதடி சிறுவர் இல்லம் மற்றும் கைதடியிலுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் விடுதி ஆகிய நலன்புரி முகாம்களிலுள்ள தற்காலிக கூடாரங்களில் இருந்த மக்களே மழை காரணமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். அத்துடன் அவர்களுக்கான சகல அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந)

# பிரித்தானிய அரசாங்கம் உறுதிமொழி ஒருவரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(லண்டன்)

பிரித்தானியாவில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கிய இருவரில் ஒருவர் நேற்று நள்ளிரவு தொடக்கம் தனது உண்ணா நிலைப் போராட்டத்தை இடை நிறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையகத்தில் நடைபெறும் சந்திப்பில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்படுவதாக வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்தே சிவதர்சன் சிவகுமாரின் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்வார் என்று பிரித்தானிய தமிழ் இளையோர் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இரவு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திப்பை நடத்தியிருந்தார். இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பிற்கு செல்ல வேண்டிய காரணத்தால் சிவதர்சன் சிவகுமாரின் உண்ணா நிலைப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு பிரித்தானிய அரசின் சார்பில் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பிரித்தானிய அரசாங்கத்தால் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று இலங்கைப் பிரச்சினை குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இக் குழுவினருடன் பிரித்தானிய தமிழ் இளையோர் இணைந்து செயற்படுமாறும் அவர் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது. (ந-5)

# சம்பந்தனுடன் முடிபெடுக்க...

சந்திக்க வேண்டுமென கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் சிலர் வலியுறுத்தும் அதே வேளையில், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்திப்பதற்காக கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று அவசரமாக சென்னைக்குச் சென்றுள்ளார்.

வடபகுதியில் தற்போது உருவாகியிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், தற்போதைய அரசியல் நிலைமை பற்றியும் ஆராய்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்த வருமாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா அழைப்பு விடுத்திருந்தது.

எதிர்வரும் 15, 16ஆம் திகதிகள் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கொழும்பில் ஆராய்ந்த போதிலும், அங்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ள மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பில் 22 உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் 10 பேர் மட்டுமே அதில் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இந்திய வெளியுறவுச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு, கூட்டமைப்பு ஏற்கனவே விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே புதுடில்லியிடம் இருந்து எமக்கு அழைப்பு வந்திருக்கின்றது.

எதிர்வரும் 15, 16ஆம் நாட்களில் மேனனைச் சந்திப்பதற்கு எமக்கு வாய்ப்பு தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்புத் தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்கள் கூடி ஆலோசனை நடத்தினர்.

அதனை ஒரு முழுமையான நாடாளுமன்றக் குழுக் கூட்டமெனக் கருதி விட முடியாது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் புதுடில்லியின் அழைப்புத் தொடர்பாக தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

எந்தவிதமான திட்டவட்டமான தீர்மானமும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அவ்வாறான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்குமானால் கூட்டமைப்பினால் அதிகாரபூர்வமான அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கும்.

எமது நாடாளுமன்றக் குழுவில் உள்ள 22 பேரில் பெரும்பாலானவர்கள் தற்சமயம் வெளிநாடுகளில் உள்ளனர். அந்தக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தற்சமயம் சென்னையில் உள்ளார்.

இதற்காக நான் சென்னைக்குச் செல்கிறேன். அவருடனான கலந்துரையாடலை தொடர்ந்து மேனனுடனான சந்திப்பு தொடர்பாக பொருத்தமான தீர்மானமொன்றை எடுப்போம்.

இவ்வாறு மாவை சேனாதிராஜா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-3,5)

# அமைச்சர்...

மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தொடர்ந்து தங்கியிருந்து பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை நெறிப்படுத்தவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# உலகெங்குமுள்ள...

பிரித்தானியாவில் நடைபெற்றஆர்ப்பாட ஊர்வலத்தில்சுமார் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தமது உணர்வெழுச்சியை வெளிப்படுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், போர் நிறுத்தம்செய்யப்பட வேண்டும். மனிதப் பேரழிவை நிறுத்த வேண்டும். உணவு, மருந்து பொருட்களை வன்னிக்கு அனுப்ப வேண்டும். ஊடகவியலாளர்களை வன்னிக்கு செல்ல அனுமதிக்க வேண்டும். சுதந்திர ஊடகவியலாளர்களை அங்கு அனுப்பி உண்மை நிலைமையை சர்வதேசம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோசங்கள் எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை சுவிஸில் நேற்று பெரும் தொகையாக கூடிய தமிழர்கள் இலங்கை அரசிற்கு எதிராகவும் ஈழத் தமிழர்களை காப்பாற்ற சுவிஸ் அரசு முன்வர வேண்டும் எனக் கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்தப் ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம முடிபுற்று மீண்டும் நாளை முதல் இடை விடாது தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது எனவும் ஏறபாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தென்னாபிரிக்காவில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நடந்து வரும் போராட்டத்தில் இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் மூன்றாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

இப்போராட்டம் குறித்து தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினரான கே.திரு குறிப்பிடும்போது, உண்ணாவிரதம் மற்றும் போராட்டம் நடைபெறும் கோவில் உள்ள பகுதிக்குஇரண்டு நாட்களாக ஒரு லட்சம் மக்கள்வந்ததாகவும் அவர்கள் ஈழவேந்தனைச் சந்தித்து தமது ஆதரவினை வெளிப்படுத்தியதோடு வன்னியில் மக்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் தமிழர்கள் ஒன்று கூடி போராட்டங்களில் ஈடுபட்டனர். (ந-5,14)


## இடமாற்றமும் மலிவு விற்பனையும்

கஸ்தூரியார் வீதியிலிருந்து 319(A) கே.கே. எஸ். வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ள எமது ஸ்தாபனத்தில் சகல விதமான றேடியோ, கசெட் றெக்கோடர், ரிவி, டெக், சிடி-டிவிடி பிளேயர், டிஸ் அன்ரனா, அன்ரனா வயர், பூஸ்ட்டர், ஓடியோ வீடியோ சீடி, பல்லஸ், பூவர்ஸ் என்பனவற்றையும் அவற்றின் உதிரிப்பாகங்களையும் (IC,Transistor) மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் முடியும்.

குறிப்பு: *மேற்படி ஸ்தாபனத்திற்கு யாழ் நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை.*

NEW CITY TRADERS,
319 (A) K.K.S. ROAD,
JAFFNA. T.P. 021 222 3226

நியு சிற்றி ரேடர்ஸ்,
319 (A) கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(2500


## மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நவரட்ணராஜா



(ஓய்வு பெற்ற மின் பொறியியலாளர், யாழ் மாநகர சபை)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நவரட்ணராஜா 09.04.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சபாமணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற சபாரெட்ணம் (பெரியசபா புங்குடுதீவு -3), பொன்னம்மாவின் மருமகனும் ராஜ்குமார் (UK), DR. இந்திரநாத் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையாரும் தேவா (UK), DR.கவிதா (மகரகம வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் தயானி, சச்சின் ஆகியோரின் பேரனும் பரராஜசிங்கம், ராஜசேகரம், வசந்தமலர் ஆகியோரின் சகோதரரும் சிறிகாந்தா, புஸ்பமலர், யோகேஸ்வரன், சர்வானந்தன், பங்கையற்செல்வி(செல்வி), காலஞ்சென்ற சபாராணி மற்றும் காந்தசொரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 12.04.2009 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91/1 A, தஞ்சி லேன்,
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்,
குடும்பத்தினர்.

(2503)


## விசா பெற்றுக் கொடுக்கப்படும்

UK, USA, SWISS, DENMARK, HOLLAND ஆகிய நாடுகளிற்கு STUDENT VISA செய்து கொடுக்கப்படும்.

*விசாவிற்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்.*

UK,EUROPE நாடுகளிற்கு சுற்றுலா VISA தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

இத்தாலி நாட்டிற்கு WORK VISA ஒரு மாதத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.

*தொடர்புகளிற்கு:* T.P. 0755653838, 0775118067

(C-2303)

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three -month English course for School leavers/ Job seekers
- The Course content comprises the four skills in the English Language - Listening, Speaking Reading & Writing
- Evaluation & Award of certificate at the end of the programme

Commencement: 22nd April 2009
Lessons on Weekdays from 3.30 - 4.30 p.m.
Closing Date: 21st April 2009

*English Language Teaching Unit*
*St John's College Jaffna.*

(C-2301)

## யாழ் மாவட்ட மின்பாவனையாளர்களே!

சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!! உங்கள் பிள்ளைகளின் கல்வி மின்வெட்டினால் பாதிப்படைவதை சிந்தியுங்கள்!!!

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் 80% மின்சக்தியை சேமிக்கக்கூடிய ஒரு CFL மின்குமிழையாவது பயன்படுத்தி (400/=செலவு செய்து) பல ஆண்டுகால மாக நீடித்த மின்வெட்டை புதுவருடப்பிறப்புக்குள் இல்லாது செய்யுங்கள்.

குறிப்பு:- அரசநிறுவனங்கள்,வங்கிகள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குஅதிகூடிய கழிவு விலையில் 20 மாத உத்தரவாதத்துடன் மானிப்பாயில் உள்ள சுந்தர்சன் நிறுவனத்தில் CFL மின்குமிழ்களை 1மாத கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம். 56/15, ஸ்ரான்லி வீதியில் உள்ள NEW ASIAN CENTER ல் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி: Jaffna Technical Institute
45, Clock Tower Road, Jaffna.
021 222 6434, 0718561654


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.